வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

ஈழநாடு




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 20.09.2022 செவ்வாய்க்கிழமை | இதழ் : 285 | பக்கங்கள் : 16

# ஐ. நா. வரைவு பிளவுபடுத்தும்

## இலங்கை எதிர்த்தே தீரும் என்கிறார் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி!

கொழும்பு, செப்ரெம்பர் 20

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் கோர் குழு முன்வைக்கவுள்ள பூச்சிய வரைவு தேவையற்றது - பிளவுபடுத்தும் தன்மை கொண்டது என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்றி தெரிவித்துள்ளார்.** 15



## சீனாவை விஞ்சியது இந்தியா!

கொழும்பு, செப். 20

இலங்கைக்கு அதிக கடனை வங்கிகள் மற்றும் நிறுவனங்களிடம் பெற்றுத் தந்த நாடாக இந்தியா மாறியுள்ளது. கடந்த 4 மாதங்களில் இலங்கைக்கு 968 மில்லியன் டொலர்களை இந்தியா பெற்றளித்தது. இதன் மூலம் கடன் வழங்கலில் சீனாவை விஞ்சியுள்ளது இந்தியா.

2017 - 2022 வரையான கடந்த 5 ஆண்டுகளில் இலங்கைக்கு கடன் வழங்கிய நாடாக சீனா இருந்தது. இந்தக் காலப் பகுதியில் இலங்கைக்கு 947 மில்லியன் டொலர்கள் சீனா பெற்றுத் தந்தது. இந்த நிலையில், இந்த ஆண்டு 15

## பணவீக்கம் இலங்கை 3ஆம் இடத்தில்!

நியூயோர்க், செப். 20

உணவுப் பணவீக்க புள்ளிவிவரங்களுக்கு அமைய உலகளாவிய ரீதியில் இலங்கை மூன்றாவது இடத்திலும், பெயரளவு உணவுப் பணவீக்க அடிப்படையில் நான்காவது இடத்திலும் இருப்பதாக உலக வங்கியின் உணவுப் பாதுகாப்பு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2021 செப்ரெம்பர் மற்றும் 2022 ஓகஸ்ட் மாதங்களுக்கு இடையிலான 15

## காணி அபகரிப்பு; நாளை போராட்டம்!

முல்லைத்தீவு, செப். 20

முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழ் மக்களின் பூர்வீக காணிகள் தொல்பொருள் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்படுவதற்கு எதிராக நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு குருந்தூர் மலையில் போராட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.

குருந்தூர்மலை, தண்ணி முறிப்பு, குமுழமுனை கிராமங்களில் 632 ஏக்கர் தமிழ் மக்களுக்கு சொந்தமான காணி ஆக்கிரமிக்கப்படுவதற்கு எதிராகவே இந்தப் போராட்டத்துக்கு அழைப்பு 15

## மது போதை அளித்த உற்சாகத்தால் வானத்தை நோக்கி சுட்ட அமைச்சர்!

கொழும்பு, செப். 20

விருந்து ஒன்றில் பங்கேற்ற அமைச்சர் மது போதை அதிகமானதைத் தொடர்ந்து துப்பாக்கியால் வானத்தை நோக்கி சூடு நடத்திய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் அறிய வருவதாவது,

கடந்த வாரம் இராஜாங்க அமைச்சர்களாக சிலர் பதவி பிரமாணம் செய்து 15

## பிடிபட்ட இலங்கையர்கள்மீது ரஷ்ய படைகள் சித்திரவதை!

கீவ், செப். 20

உக்ரைனில் ரஷ்ய படையினரின் பிடியிலிருந்து மீட்கப்பட்ட இலங்கையர்களின் புகைப்படங்களும் மேலதிக விவரங்களும் நேற்று வெளியாகின.

பிடிபட்ட இலங்கையர்களை ரஷ்ய இராணுவத்தினர் சித்திரவதைகளுக்கு உள்ளாக் கினர் என்று 15






## தியாகி திலீபன் நினைவேந்தல் பொது கட்டமைப்பு உருவாக்கம்!

யாழ்ப்பாணம், செப். 20

அனைத்துத் தரப்புகளையும் ஒன்றிணைத்து தியாக தீபம் திலீபன் நினைவேந்தலை முன்னெடுக்க 15 பேர் கொண்ட பொதுக் கட்டமைப்பு அமைக்கப்பட்டது.

நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்திலேயே இந்தப் பொதுக் கட்டமைப்பு உதயமானது.

தியாக தீபம் திலீபன் நினைவேந்தல் ஒழுங்கமைப்பது -பொதுக் கட்டமைப்பை அமைப்பது தொடர்பில்யாழ். மாநகர முதல்வர் 15

## தடுத்து வைக்கப்பட்டோர் மாணவர்கள் இல்லை!

### வெளிவிவகார அமைச்சு

கொழும்பு, செப். 20

உக்ரைனின் கார்கிவ் நகரில் ரஷ்ய படையினரால் பலவந்தமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த 7 இலங்கையர்களும் மருத்துவ மாணவர்கள் அல்ல என்று வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தெரிவித்துள்ளார்.

இவர்கள் சட்ட 15

## இலங்கை அரசு குற்றமிழைத்தது!

### பத்திரிகையாளர் படுகொலை தொடர்பான மக்கள் தீர்ப்பாயம்!

நியூயோர்க், செப். 20

இலங்கை, சிரியா, மெக்சிக்கோ ஆகிய நாடுகள் மனித உரிமைகள் மீறல்களில் ஈடுபட்டன என்று பத்திரிகையாளர்கள் படுகொலை தொடர்பான 15


மகாராணியின் உடலப்பேழை சென். ஜோர்ஜ் தேவாலயத்தில் வைக்கப்பட்டு பிரார்த்தனை இடம்பெற்றபோது...!

## மகாராணி எலிசபெத் உடலம் நல்லடக்கம்!

லண்டன், செப். 20

பிரித்தானியாவை மிக நீண்ட காலம் (70 வருடங்கள்) ஆட்சி செய்தவர் என்ற பெருமைக்குரிய, இரண்டாம் எலிசபெத் மகாராணியின் இறுதிச் சடங்கு, பூரண அரச மரியா 15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

இலங்கையில் விரைவில் குட்டிப் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்த வேண்டிய சூழ்நிலைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலையை கருத்தில் கொண்டு மக்கள் ஆணை ஒன்றின் மூலம் ஆட்சியைக் கைப்பற்ற எதிரணிகள் விரும்புகின்றன. ஆனால், உடனடித் தேர்தல் ஒன்று ஆளும் பொதுஜன பெரமுனவுக்கோ அல்லது ஜனாதிபதியின் ஐக்கிய தேசியக் கட்சிக்கோ விருப்பத்துக்குரியதல்ல.

உடனடித் தேர்தல் ஒன்று நடந்தால் தமது கட்சி பாரிய பின்னடைவைச் சந்திக்கும் என்பது இவர்களுக்குத் தெரிந்ததுதான். அதனால்தான் ஜனாதிபதி ரணில், தனது பதவிக் காலம் முடிவடைவதற்கு முன்னதாக வீழ்ந்து கிடக்கும் பொருளாதாரத்தை தூக்கி நிமிர்த்தி விட்டு தேர்தல் ஒன்றுக்கு செல்லவே விரும்புகின்றார். இதன் மூலம் வெற்றியை அடைய முடியும் என்று அவர் கணக்குப் போட்டு வருகின்றார்.

விரைவில் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டால், பொருளாதார நெருக்கடியை விரைவாகக் கடக்க ஆணை பெற்று இலங்கை சர்வதேச ஆதரவைப் பெற முடியும். இல்லாவிட்டால், எதிர்காலத்தில் நாட்டில் என்ன நிலைமை ஏற்படும் என்பதை கற்பனை செய்வது கடினம் என்று எதிர்க்கட்சிகள் தெரிவித்து வருகின்றன.

அரசமைப்பின் பிரகாரம் உள்ளூராட்சி சபைத் தேர்தலை இப்போதே நடத்தியிருக்க வேண்டும். ஆனால், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடந்த ஜனவரி மாதம் அதனை ஒரு வருடத்துக்கு ஒத்திவைக்க தீர்மானித்தார். ஆனால், தற்போதுள்ள அரசமைப்பின் பிரகாரம் உள்ளூராட்சி சபைத் தேர்தலை இனியும் பிற்போட முடியாது. தேர்தலை மார்ச் இருபதுக்கு முன்னர் நடத்தி முடித்து புதிய உறுப்பினர்களை நியமிக்க வேண்டும்.

அதற்கான ஆயத்தங்களை ஏற்கனவே தேர்தல்கள் ஆணைக்குழு ஆரம்பித்து விட்டது. உள்ளூராட்சி தேர்தல் சட்டத்தின் பிரகாரம் அடுத்தமாதம் இருபதாம் திகதிக்கு பின்னர் தேர்தலுக்கான திகதியை அறிவிக்கும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு உண்டு என்று அதன் தலைவர் திரும்பத் திரும்பக் கூறிவருகின்றார்.

ஆனால், நாட்டின் தற்போதைய நிலவரப்படி உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்பட்டால் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் பொதுஜன பெரமுனவுக்கும் ஏற்படும் பயங்கரமான கதி என்ன என்பதை ஐக்கிய தேசியக் கட்சியினரும் பொதுஜன பெரமுனவினரும் நன்கு அறிவர்.

அப்படி ஒரு தேர்தல் நடைபெற்றால், உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றி பெறும் எதிர்க்கட்சியே அடுத்த பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றும் என்பதும் ஜனாதிபதிக்கும் அரசாங்கத்தில் உள்ள பொதுஜன பெரமுன கட்சியினருக்கும் நன்றாகவே தெரியும்.

நல்லாட்சிக் காலத்தில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் முதன்முறையாக போட்டியிட்ட- அப்போது எதிரணியில் இருந்த மகிந்த தலைமையிலான பொதுஜன பெரமுன அமோக வெற்றிபெற்றது. அந்த வெற்றியே அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் பிரதிபலித்தது.

இதனால்தான் உள்ளூராட்சி சபைத் தேர்தலை எப்படியாவது ஒத்திவைக்க ரணில் தற்போது விநோதமான இராகத்தில் துருப்புச் சீட்டு வாசிக்கத் தொடங்கியிருக்கின்றார்.

நாட்டில் தேர்தல் முறையை மாற்றியமைக்க வேண்டும் என்ற அவரின் கருத்து, இந்தத் தேர்தலை ஒத்திவைப்பதற்கான அறிகுறி என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் அமைப்பு தெரிவித்திருந்தது ஞாபகமிருக்கலாம்.

கடந்த சில நாட்களாக ஐக்கிய தேசியக் கட்சியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் ஜனாதிபதி, கட்சியின் மூத்த உறுப்பினர்கள் மற்றும் ஜனாதிபதியின் ஆலோசகர்களை தொலைபேசி ஊடாக தொடர்ந்து தொடர்பு கொண்டு வருகிறார் எனவும் அவர்களுக்கும் தேர்தல் நடைபெறாது என்ற உறுதிமொழியே வழங்கப்பட்டு வருவதாகவும் கொழும்பில் ஐ. தே. கவுடன் நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

தேர்தல் ஆணைக்குழுவுக்கும் ஜனாதிபதி - அரசாங்கத்துக்கும் எதிரான கயிறு இழுப்பு தொடங்கப்போவதையே நடக்கும் சம்பவங்கள் உணர்த்துகின்றன.!

- ஊர்க்குருவி

# ஒரு கோடி ரூபாய் வருமானம் ஈட்டியது தாமரை கோபுரம்!

கொழும்பு, செப். 20

தாமரை கோபுரம் திறக்கப்பட்ட 15ஆம் திகதி முதல் நேற்று வரை சுமார் ஒரு கோடி ரூபாய் வருமானம் கிடைத்துள்ளதாக தாமரைக் கோபுரத்தின் முகாமைத்துவ தனியார் நிறுவனம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக நேற்று முன்தினம் இரவு 8 மணி வரை 6800இற்கும் அதிகமான நுழைவுச்சீட்டுக்கள் விற்பனையாகின என்று அதன் பிரதம நிர்வாக அதிகாரி ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

பெருமளவிலான மக்கள் வருகையால் தாமரை கோபுர வளாகத்தில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதையடுத்து, நிலைமையை கட்டுப்படுத்த நிர்வாகம் நேற்று முன்தினம் இரவு நுழைவுச்சீட்டுக்கள் வழங்குவதை தற்காலிகமாக இடைநிறுத்தியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தாமரை கோபுரத்தை பார்வையிட 500 ரூபாய் நுழைவுச்சீட்டுக்கள் மட்டுமே தற்போது வழங்கப்படுகிறது.

இதேசமயம், தாமரைக் கோபுரத்தை வார நாட்களில் நண்பகல் 12 மணி முதல் 10 மணி வரையும், வார இறுதி நாட்களில் முற்பகல் 10 மணி முதல் இரவு 11 மணிவரையும் பார்வையிட முடியும் என்றும் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார். (ஐ)

# பார்வையாளர்க்காக இன்று முதல் திறக்கப்படுகிறது பாராளுமன்றம்!

கொழும்பு, செப். 20

பாராளுமன்றில் பொதுமக்கள் பார்வையாளர் கூடம் இன்று செவ்வாய்க்கிழமை முதல் திறக்கப்படவுள்ளது என்று படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கோவிட்-19 தொற்று பரவல் மற்றும் பாதுகாப்புக் காரணங்களுக்காக பாராளுமன்ற பார்வையிடல் இதுவரை விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது தொடர்பில் படைக்கல சேவிதரால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவு பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவால் கடந்த 14ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதற்கமைய முதல்கட்டமாக பாராளுமன்ற அமர்வு தினங்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பாராளுமன்றத்தை பார்வையிட விரும்பும் தரப்பினருக்கு அனுமதியை வழங்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

இன்றைய தினம் முதல் அமுலுக்கு வரும் வகையில் பாடசாலை மாணவர்கள் பாராளுமன்றக் கட்டடத் தொகுதிக்கு வருகைதர முடியும். இதற்கமைய, காலை 9.30 முதல் பிற்பகல் 3 மணிவரை அனுமதிக்கப்படுவார்கள் என பாராளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்தார்.

அத்துடன், பாராளுமன்றுக்கு பிரவேசிப்பதற்கான விண்ணப்பங்களை www.parliament.lk என்ற இணையத்தளம் மூலம் பெறலாம். அத்துடன், 011 2777 473, 011 2777 335 என்ற தொலைநகல் இலக்கங்கள் ஊடாகவும் சமர்ப்பிக்க முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

பல்கலைக்கழகங்களின் மாணவர் குழுக்கள், அரசின் கீழ் பதிவுசெய்யப்பட்ட உயர் கல்வி நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலா பயணிகளும் இந்த வசதியைப் பெற்றுக் கொள்ளலாம் என படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்தார். (ஐ)

# போக்குவரத்து கொடுப்பனவை ஆசிரியர்களுக்கு வழங்குங்கள்!

## இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை

கொழும்பு, செப். 20

போக்குவரத்துக்காக ஆசிரியர்களில் ஒரு பகுதியினர் தினசரி ஆயிரம் ரூபாய்க்கு மேல் செலவு செய்கின்றனர். இதற்கான கொடுப்பனவை கல்வி அமைச்சு ஊடாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதற்காக, ஆசிரியர்களின் போக்குவரத்து செலவுகள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் முறைமை ஒன்றைத் தயாரிக்குமாறு கல்வி அமைச்சை அந்தச் சங்கம் கோரியுள்ளது.

தொலைதூரப் பகுதிகளில் உள்ள ஆசிரியர்கள் தினசரி போக்குவரத்துக்காக அதிகளவு பணத்தை செலவு செய்கின்றனர். நாளொன்றுக்கு ஆயிரம் ரூபாய்க்கு மேல் செலவு செய்து ஆசிரியர்கள் பாடசாலைகளுக்குச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, ஆசிரியர்களுக்கு போக்குவரத்துக் கொடுப்பனவை அமைச்சின் மூலம் பெற்றுக் கொடுப்பதற்காகவே குறித்த கோரிக்கையை முன்வைத்துள்ளதாக தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கூறியதாவது:

தொலைதூர பகுதிகளில் உள்ள ஆசிரியர்கள் பாடசாலைக்கு செல்ல தினமும் ஏராளமான பணம் செலவழிக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளதாக தெரிவித்துள்ளார். (ஐ)

# பொதுமக்கள் எழுச்சி மீண்டும் ஏற்படலாம்!

## சம்பிக்க ரணவக்க எம். பி.



கொழும்பு, செப். 20

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் செயல்படத் தவறினால் மீண்டுமொரு மக்கள் எழுச்சி ஏற்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க எச்சரித்துள்ளார்.

மிகவும் சவாலான காலப்பகுதியில் ரணில் ஜனாதிபதியானார். இதன் காரணமாக எதிர்க்கட்சிகள் தற்போது அவரை விமர்சிக்காது. சிலர் அவரை ஓகஸ்ட் 9 மற்றும் செப்ரெம்பர் 9 ஆகிய திகதிகளில் அனுப்ப முயன்றனர். இருப்பினும், மக்கள் அதில் அதிக ஆர்வம் காட்டவில்லை. ஆனால், அவர் தனது பொறுப்பை நிறைவேற்றத் தவறினால் மீண்டும் ஒரு பொது எழுச்சி ஏற்படும்," என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
20.09.2022 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், புரட்டாதி 03

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 730 1370**

# தமிழ் அரசு கட்சியின் தீர்மானம் அரங்கேறுமா?

கடந்த இரண்டு தசாப்தங்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே தமிழ் மக்களின் பிரதான அரசியல் தலைமையாக நீடித்துவருகின்றது. ஆனால், இந்த நிலைமை தொடர்ந்தும் நீடிக்குமா என்னும் கேள்வி எழுந்திருக்கின்றது. குறிப்பாக, இரா. சம்பந்தன் அரசியலில் இயங்க முடியாத நிலையிருக்கும் நிலையில், தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒருவிதமாகவும் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் இன்னொரு விதமாகவும் செயல்பட்டு வருகின்றனர். ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளருக்கு பங்காளிக் கட்சிகள் விக்னேஸ்வரன் அணியோடு இணைந்து கடிதங்களை அனுப்புகின்றன. தமிழ் அரசு கட்சி தனியாக செயல்பட்டு வருகின்றது.

தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிக்கொள்ளும் தரப்புக்கள் ஓர் அணிக்குள் இருந்தவாறே முற்றிலும் மாறுபட்ட வகையில் செயல்படுகின்றனர். உண்மையில் பங்காளிக் கட்சிகள் கூட்டமைப்பில் இருந்தவாறு தனியான கடிதங்களை அனுப்புவது - அதிலும், கடந்த தேர்தலில் கூட்டமைப்பை எதிர்த்துப் போட்டியிட்டவர்களோடு இணைந்து செயல்படுவதானது அடிப்படையிலேயே முரண்பாடான விடயமாகும். இந்த நிலைமையின் உண்மையான காரணம் என்ன? கூட்டமைப்பின் எதிர்காலம் தொடர்பான அச்சத்திலிருந்தே பங்காளிக் கட்சிகள் தங்களை பலப்படுத்திக் கொள்ளும் முயற்சியில் மெதுவாக ஈடுபட முயற்சிக்கின்றன. இதன் காரணமாகவே இவ்வாறான செயல்பாடுகளில் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், பங்காளிக் கட்சிகளுடன் பேசவுள்ளதாக தமிழ் அரசு கட்சியின் மத்திய குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னரும் இவ்வாறான பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், எவையுமே நடைமுறைக்கு வரவில்லை. அண்மைக்காலமாக தமிழ் அரசுக் கட்சி தனித்து செல்ல வேண்டும் என்றவாறான அபிப்பிராயங்களை தமிழ் அரசு கட்சியின் முக்கியஸ்தர்கள் முன்வைத்து வருகின்றனர்.

தனித்து செல்வதால் இலாபமடையக் கூடியவர்களே அவ்வாறான கருத்துக்களை முன்வைக்கின்றனர். ஆனால், தனித்துச் செல்வதால் தங்களுக்கு பாதகமான விளைவுகள் ஏற்படலாமென்று எண்ணுபவர்கள் எவ்வாறாயினும் கூட்டமைப்பைப் பாதுகாக்க வேண்டுமென்று எண்ணுகின்றனர். ஏனெனில், தமிழ் அரசுக் கட்சியின் செல்வாக்கும் கணிசமாக வீழ்சியடைந்திருக்கின்றது. இந்த நிலையில் தனித்து சென்றால், இப்போது வீட்டுச் சின்னத்துக்கு கிடைத்திருக்கும் பத்து ஆசனங்களை நிச்சயம் பெற முடியாது. இந்த நிலைமையைக் கணிப்பவர்கள் ஏதோவொரு வகையில் பங்காளிக் கட்சிகளையும் இழுத்துக் கொண்டு பயணிக்க வேண்டுமென்றே எண்ணுகின்றனர். இதன் காரணமாக தமிழ் அரசுக் கட்சிக்குள்ளும் கூட்டமைப்பு தொடர்பில் இரண்டு விதமான கருத்துக்கள் இருக்கின்றன. மாவை சேனாதிராசா மற்றும் அவருக்கு ஆதரவானவர்கள் கூட்டமைப்பைத் தக்கவைக்க வேண்டுமென்றே கருதுகின்றனர். இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களோடு பேசுவதென்னும் முடிவு எட்டப்பட்டிருக்கின்றது.

இது வெறுமனே பேசுகின்ற விடயம் மட்டுமல்ல. கடந்த இரண்டு தசாப்த கால கூட்டமைப்பின் பயணத்தில், ஒரு தசாப்த காலம் விடுதலைப் புலிகளின் ஆளுகைக்குள் இருந்தது. அதன் பின்னரான கடந்த ஒரு தசாப்த காலம் தமிழ் அரசு கட்சியின் ஆளுகைக்குள் இருந்தது. விடுதலைப் புலிகளின் காலம் முற்றிலும் வேறுபட்டது.

எனவே, தமிழ் அரசு கட்சியின் ஆதிக்கத்தின் கீழ்தான் கூட்டமைப்பு தொடர வேண்டுமென்று எண்ணுவது தவறானது. ஒரு கூட்டமைப்புக்கான அரசியல் கட்டமைப்பு மற்றும் அரசியல் ஒழுக்கத்தோடு பயணிக்காதுவிட்டால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஒரு கூட்டமைப்பாக இனிமேல் பயணிப்பது மிகவும் கடினமாகும். இதனைப் புரிந்துகொண்டு கூட்டமைப்பை ஜனநாயக பண்புகளுள்ள ஓர் அரசியல் கட்டமைப்பாக மாற்றியமைப்பது தொடர்பில் தமிழ் அரசுக் கட்சி சிந்திக்க வேண்டும். பங்காளிக் கட்சிகளோடு பேச வேண்டும் என்னும் தீர்மானம் இவ்வாறானதொரு நல்ல நோக்கம் கொண்டதாக இருப்பின் அதனை வரவேற்கலாம். ஆனால், தொடர்ந்தும் தமிழ் அரசு கட்சியின் மேலாதிக்கத்தின் கீழ் மட்டும்தான் கூட்டமைப்பு இருக்க வேண்டுமென்னும் நோக்கத்தோடு இயங்க முற்பட்டால் இறுதியில் கூட்டமைப்பும் வீழ்ந்து, தமிழ் அரசு கட்சியும் வீழ்ந்து போகும் நிலைமையே ஏற்படும்.

# தியாகி திலீபனின் நினைவேந்தலை மக்கள் எழுச்சியாக முன்னெடுப்போம்

## வேலன் சுவாமிகள்

*யாழ்ப்பாணம், செப். 20*

திலீபனின் நினைவேந்தல் நிகழ்வை மக்களின் எழுச்சியாக - மக்களின் புரட்சியாக முன்னெடுக்க தீர்மானித்திருக்கின்றோம் என்று தவத்திரு வேலன் சுவாமிகள் தெரிவித்தார்.

"மக்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக ஒரே குடும்பமாக இணைந்து எவ்வாறு சிறப்பாக தியாக தீபம் திலீபனின் நினை வேந்தலை நினைவுகூருவது என்பது தொடர் பான கலந்துரையாடல் நேற்று நல்லை ஆதீ னத்தில் இடம்பெற்றது. இதில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலை முன்னெடுக்கும் முகமாக தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்து - ஒற்றுமையாக இந்த நினைவேந்தலை ஒரு மக்கள் எழுச்சியாக புரட்சியாக முன்னெடுக்கும் விதமாக இன்றைய தினம் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில திலீபன் நினைவேந்தலை ஒழுங்கு செய்கின்ற ஒரு கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. 15 பேர் உள்ளடக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த நிகழ்வை முன்னெடுக்கின்ற பொது கட்டமைப்பான - நாங்கள் தியாக தீபம் திலீபனுடைய நினைவுகளில் எந்தவித முரண்பாடும் இன்றி, யாரும் எந்தவித சுய இலாபத்துக்கும் இதனை பயன்படுத்தாத விதத்திலே ஒட்டுமொத்த தமிழினமாக விடுதலைக்கான பயணமாக முன்னெடுப்பதற்காக நாங்கள் அனைத்து முயற்சிகளையும் இதய சுத்தியோடும் இலட்சியப்பற்றோடும் முன்னெடுக்கவுள்ளோம்.

ஒவ்வொரு சமூகக் கட்டமைப்பில் இருந்தும் பிரதிநிதிகள் இந்தப் பொதுக் கட்டமைப்புக்கு உள்வாங்கப்பட்டுள்ளனர். இப்போதிலிருந்து இந்தக் கட்டமைப்பானது தன்னுடைய ஒருங்கிணைப்பு பணிகளை முன்னெடுக்கவுள்ளது. இந்த விதத்திலே கட்சித் தலைவர்களை சந்தித்தும், மக்கள் ஆதரவை பெற்று எவ்வாறு இந்த நினைவேந்தலை முன்னெடுக்கலாம் என்பது பற்றி நாங்கள் தொடர்ச்சியாக செயல்படவுள்ளோம்.

நினைவேந்தல் இம்முறை மிகவும் சிறப்பாக இடம் பெற வேண்டும். எங்களுடைய உறவுகள் அனைவரும் இதற்கு முழுமையான ஆதரவை தர வேண்டும். மிக எழுச்சியாக அனைவரும் இம்முறை இந்த எழுச்சியை காட்ட வேண்டும். மக்கள் புரட்சி வெடிக்கட்டும் என்ற கோட்பாட்டுக்கு அமைய மக்களின் எழுச்சி எப்போது ஏற்படுகின்றதோ எங்களுடைய விடுதலை - இனத்தின் விடுதலை அனைத்துமே அப்போதே சாத்தியமாகும் என்பதுதான் நிதர்சனமான உண்மை. இந்த அடிப்படையில், இந்தப் பொது கட்டமைப்பு செயல்பட்டு திலீபனின் நினைவேந்தலை மிக சிறப்பாக நினைவுகூரும் - என்றார்.

(ஐ)

# திலீபனின் நோக்கம் நிறைவேறும் தளமாக நினைவேந்தல் ஏற்பாடு!

## *யாழ்ப்பாண மறை மாவட்ட குரு முதல்வர்*

*யாழ்ப்பாணம், செப். 20*

யாழ்ப்பாண மறை மாவட்ட குரு முதல்வர்

எந்த நோக்கத்திற்காக தியாகி திலீபன் தன்னுடைய உயிரை தியாகம் செய்தாரோ அந்த நோக்கம் நிறைவேறுவதற்கான ஒரு தளமாக நினைவேந்தலை ஏற்பாடு செய்து நடத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள இருக்கின்றோம் என்று யாழ்ப்பாண மறை மாவட்ட குரு முதல்வர் ஜெ. ஜெபரட்ணம் அடிகளார் தெரிவித்தார்


மக்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக ஒரே குடும்பமாக இணைந்து எவ்வாறு சிறப்பாக தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலை நினைவுகூருவது என்பது தொடர்பான கலந்துரையாடல் நேற்று நல்லை ஆதினத்தில் இடம்பெற்றது. இதில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், தியாகி திலீபன் நினைவேந்தல் ஏற்பாட்டு குழுவில் மதத் தலைவர்கள், பல்கலைக்கழக மாணவர்களின் பிரதிநிதிகள், முன்னாள் போராளிகள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், மாவீரர்களின் பெற்றோரின் பிரதிநிதிகள் உள்ளடங்கிய 15 பேர் கொண்ட குழுவை இன்று ஏற்படுத்தி இருக்கின்றோம்.

நாங்கள் - 15 பேரும் ஒன்று சேர்ந்து தியாகி திலீபனின் நினைவேந்தலை எவ்வாறு எந்த விதமான களங்கமும் இல்லாது ஒற்றுமையாக அவர் எந்த நோக்கத்துக்காக தன்னுடைய உயிரை தியாகம் செய்தாரோ அந்த நோக்கம் நிறைவேறுவதற்கான ஒரு தளமாக இந்த நினைவேந்தலை ஏற்பாடு செய்து நடத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள இருக்கின்றோம்.

ஆகவே, நிகழ்வு சிறப்பாக நடத்துவதற்கு கூட்டங்களை நடத்தி அதனை சிறப்பாக முன்னெடுப்பதற்கான அனைவரின் ஒத்துழைப்பையும் நாங்கள் எதிர்பார்த்திருக்கின்றோம் - என்றார். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
அரசு வழியிலான முயற்சி நிறைவேறும். நண்பர் உதவியால் நினைத்ததை சாதிப்பீர்கள். வியாபாரத்தில் தடைகள் விலகும். எதிர்பார்த்த பணவரவு வந்து சேரும். லாபம் கிடைக்கும். முயற்சி நிறைவேறும்.

**இடபம்**
கொடுக்கல் வாங்கலில் கவனமுடன் செயல்பட வேண்டும். குடும்பத்தில் ஒற்றுமை அதிகரிக்கும். பொன் பொருள் சேரும். நிதிநிலை சீராகும். வெளியில் இருந்து வர வேண்டிய பணம் கைக்கு வரும்.

**மிதுனம்**
மனதில் குழப்பமும் செயலில் தடுமாற்றமும் ஏற்படும். நிதானம் தேவை. நீங்கள் மேற்கொள்ளும் முயற்சியை நிறைவேற்ற முடியாமல் சங்கடப்படுவீர்கள். யோசித்து செயல்படுங்கள்.

**கடகம்**
குடும்பத் தேவைக்காக வீட்டிலுள்ள பொருட்களை விற்பனை செய்து சமாளிப்பீர்கள். புதிய முயற்சி பலன் தராமல் போகும். அத்தியாவசிய செலவு அதிகரிக்கும். சேமிப்பு பணம் கை கொடுக்கும்.

**சிம்மம்**
புதிய முயற்சி லாபம் அளிக்கும். தொழிலை விரிவு செய்வீர்கள். புதிய வேலை அமையும். குடும்பத்தில் இருந்த சங்கடங்கள் விலகும். முயற்சிகள் வெற்றியாகும். பொன் பொருள் சேர்க்கை மகிழ்ச்சியை தரும்.

**கன்னி**
எதிர்பார்த்த ஆதாயம் ஏற்படும். தொழில் தொடங்கும் முயற்சி நிறைவேறும். பணியில் இருந்த பிரச்னைகளை சரி செய்வீர்கள். அதிகாரியின் ஆதரவு உண்டாகும். லாபம் அதிகரிக்கும்.

**துலாம்**
நினைத்ததை சாதிப்பீர்கள். மனக்குழப்பம் அதிகரிக்கும். முயற்சியில் இழுபறியும் தாமதமும் ஏற்படும். விருப்பத்தை நிறைவேற்ற வேகமாக செயல்படுவீர்கள். நண்பரின் உதவி கிடைக்கும்.

**விருச்சிகம்**
செயல்களில் சங்கடம் குறுக்கிடும். புதிய முயற்சிகளைத் தள்ளிப் போடுங்கள். பிரச்னை உங்களைத் தேடி வரும். அரசு வழியில் நெருக்கடி வரலாம். குறுக்குவழி செயல்களால் சங்கடம் தோன்றும்.

**தனுசு**
கனவு நிறைவேறும். புதிய வாகனம் வாங்குவீர்கள். வழக்கு சாதகமாகும். வாழ்க்கைத் துணையுடன் ஏற்பட்ட பிரச்னை தீரும். விட்டுக்கொடுத்து செயல்படுவீர்கள். கூட்டுத்தொழில் லாபம் தரும்.

**மகரம்**
எதிர்ப்பு விலகும். உங்கள் செயல்களில் சாதகமான நிலை உருவாகும். முயற்சி இன்று உங்களுக்கு சாதகமாகும். துணிச்சலுடன் செயல்படுவீர்கள். முயற்சியில் லாபம் அடைவீர்கள்.

**கும்பம்**
குடும்ப உறவுகளிடம் மனக்கசப்பு ஏற்படும். விட்டுக் கொடுப்பதால் நன்மை உண்டாகும். பிள்ளைகளால் சங்கடத்திற்கு ஆளாவீர்கள். குடும்பத்தில் நெருக்கடி ஏற்படலாம். முயற்சிகள் இழுபறியாகும்.

**மீனம்**
சங்கடம் உண்டாகும். பணியிடத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். அதிகாரிகளின் கண்டிப்பிற்கு ஆளாவீர்கள். அலைச்சல் அதிகரிக்கும். உங்கள் செயல்களில் அனுகூலமற்ற நிலையை சந்திப்பீர்கள்.

# நான் இந்தியனே இல்லை!

## - நாம் தமிழர் சீமான் -



திருச்சி, செப். 20

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானிடம், ஹிந்தி மொழி குறித்து செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு, "நான் இந்தியனே இல்லை. எனக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை" என பதிலளித்தார்.

நேற்று திருச்சியில் செய்தியாளர்களை சந்தித்தார் சீமான். இதன்போது, பாரதிய ஜனதா கட்சியின் முக்கிய நோக்கம் ஹிந்தி, சமஸ்கிருதம்தான். ஆங்கிலம்கூட இல்லை. சில்லறை வர்த்தகத்தில், அந்நிய முதலீடு நல்லது என்று சொல்லி விட்டு போவதுதான். மூன்று, ஐந்து மற்றும் எட்டாம் வகுப்பு வரை தாய்மொழி கல்வி படித்தால் போதும் என்று சொல்வது, தமிழ் மொழிக்கு சரிப்பட்டு வராது. தமிழ் மொழி ஒரு கடல் முதுகலை, ஆய்வு மாணவர்கள்கூட சிலவற்றுக்கு பொருள் தெரியாமல் பொழிப்புரை தேடுகின்றனர். "புதிய கல்விக் கொள்கை என்பது, நம் குழந்தைகளுக்கான மரண சாசனம்" என்று அறிஞர்களே சொல்லியுள்ளனர்.

மதங்கள் இடையில் வந்தவை என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இந்தியாவின் தொன்மையான மொழி தமிழ்தான். அந்த மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

பேட்டியின்போது செய்தியாளர்கள், "ஆங்கிலத்திற்கு மாற்றாக ஹிந்தி மொழியை பயன்படுத்த வேண்டும், ஹிந்தியை பாதுகாக்க வேண்டும் என அமித்ஷா கூறியுள்ளார்" என கேள்வி எழுப்பியதற்கு, "நான் இந்தியனே இல்லை. எனக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை" என சீமான் பதிலளித்தார். (ஐ)

# இந்திய காங்கிரஸ் தலைவராக ராகுல் காந்தியே வரவேண்டும்!

## தமிழக காங்கிரஸ் தீர்மானம்

சென்னை, செப். 20

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவராக ராகுல் காந்தி வரவேண்டும் என்று தமிழக காங்கிரஸ் கட்சியின் பொதுக்குழு கூட்டத்தில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

காங்கிரஸ் கட்சியின் தலைவர் தேர்தல் எதிர்வரும் ஒக்ரோபர் 17ஆம் திகதி நடைபெறவுள்ளது.

கடந்த 2019 பாராளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் தோல்விக்கு பொறுப்பேற்று, அந்தப் பதவியிலிருந்து விலகிய ராகுல் காந்தி மீண்டும் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்க மறுத்துவருகிறார்.

இந்நிலையில், 3,600 கி. மீற்றர் நடைபயணத்தில் ராகுல் காந்தி ஈடுபட்டு வருகிறார். இந்நிலையில், தமிழ்நாடு காங்கிரஸ் பொதுக் குழு கூட்டம் நேற்று நடந்தது.

இந்தக் கூட்டத்தில் ராகுல் காந்தியை அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவராக வரவேண்டும் என்று ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முன்னதாக, ராஜஸ்தான், சத்தீஸ்கர், புதுச்சேரி உள்ளிட்ட மாநில கட்சிகளின் பொதுக் குழுவில் ராகுல் காந்திக்கு ஆதரவாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# அ. தி. மு. க. உட்கட்சி தேர்தல்; எதிரான வழக்கு தள்ளுபடி!

சென்னை, செப். 20

அ. தி. மு. க. உட்கட்சி தேர்தலை எதிர்த்து முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கே. சி. பழனிசாமி தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2021ஆம் ஆண்டு டிசெம்பர் 6ஆம் திகதி நடைபெற்றஅ. தி. மு. க. உட்கட்சி தேர்தலில் ஒருங்கிணைப்பாளராக ஓ. பன்னீர் செல்வம் மற்றும் இணை ஒருங்கிணைப்பாளராக எடப்பாடி பழனிச்சாமி ஒருமனதாக தேர்ந்தெடுக்கபட்டனர். இந்தத் தேர்தலை இரத்து செய்யக் கோரி அ. தி. மு. கவிலிருந்து நீக்கப்பட்ட பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் கே.சி பழனிசாமி வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு நேற்று விசாரிக்கப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிபதி, "உட்கட்சி தேர்தலை எதிர்த்து கே. சி.பழனிசாமி மனுத்தாக்கல் செய்ய அவருக்கு தகுதியில்லை என்பதால் இந்த மனுவை தள்ளுபடி செய்வதாக உத்தரவிட்டார். (ஐ)

# தீண்டாமை அதிகரிப்பதற்கு அரசின் அலட்சியமே காரணம்!

சென்னை, செப். 20

"சட்டப்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டு விட்டது என்றாலும், தமிழ்நாட்டில் ஆங்காங்கே தலைகாட்டிக் கொண்டுதான் இருக்கிறது. இது தற்போது தமிழ்நாட்டில் அதிகரித்த வண்ணம் உள்ளது. இதற்குக் காரணம் தி. மு. க. அரசின் அலட்சியப்போக்கே என்று சொன்னால் அது மிகையாகாது" என்று ஓ. பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற திருவள்ளுவரின் வாய்மொழிக்கிணங்க, பிறப்பினால் மனிதர்கள் ஒரே மாதிரியானவர்கள். மனிதர்களில் உயர்வு, தாழ்வு கிடையாது. "சாதி இரண்டொழிய வேறில்லை" என்றார் ஔவை பிராட்டியார். "சாதிகள் இல்லையடி பாப்பா" என்று பாடினார் மகாகவி பாரதியார். இப்படி சாதிக்கு எதிராக போராடியவர்கள் வாழ்ந்த தமிழ் மண்ணில், தீண்டாமை சட்டப்படி ஒழிக்கப்பட்டும், ஆங்காங்கே தலைகாட்டுவது மிகவும் வருத்தம் அளிக்கும் செயலாகும்.

இதனை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டிய பொறுப்பும், கடமையும் தமிழ்நாடு அரசிற்கு உண்டு. அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு கல்வியை போதிப்பது மட்டுமின்றி, அவர்களின் செயல்பாடுகளைக் கண்காணிப்பதும், மாணவர்கள் தங்களுக்குள் ஒற்றுமையாக செயல்படுவது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் பள்ளிக் கல்வித் துறையின் தலையாய கடமையாகும்.

# எந்தத் தேர்தலையும் எதிர்கொள்ளத் தயார்!

## விமல் வீரவன்ஸ அறிவிப்பு

கொழும்பு, செப். 20

"அடுத்துவரும் எந்தவொரு தேர்தலாக இருந்தாலும் அதனை 'மேலவை இலங்கை கூட்டமைப்'பாகவே நாம் எதிர்கொள்வோம்."

- இவ்வாறு மேற்படி கூட்டணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

மேலவை இலங்கை கூட்டமைப்பின் முதலாவது நிறைவேற்றுக்குழுக் கூட்டம், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே விமல் வீரவன்ஸ இவ்வாறு கூறினார்.

"சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்குமாறு கோரினோம். அந்த உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை. மொட்டு, யானை ஆட்சியே தொடர்கின்றது. அந்த ஆட்சியின் கீழ் எந்தவொரு பதவியையும் ஏற்கப்போவதில்லை.

உள்ளாட்சி சபைத் தேர்தல் மட்டுமல்ல அடுத்து நடைபெறும் எந்தவொரு தேர்தலாக இருந்தாலும் எமது கூட்டணி போட்டியிடும்." என்றும் விமல் கூறினார். (அ)

# மரக்கறி விலை வீழ்ச்சி!

கொழும்பு, செப். 20

உள்ளூர் பெரிய வெங்காயம் மற்றும் மரக்கறிகளின் மொத்த விலைகள் குறைந்துள்ளதாக தம்புள்ளை மொத்த மரக்கறி வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

நேற்றைய தினம் 10 இலட்சம் கிலோ மரக்கறிகளும் 5 இலட்சம் கிலோ உள்ளூர் வெங்காயமும் கிடைத்துள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

மரக்கறிகளின் மொத்த விற்பனை அதிகரிப்புடன் மொத்த விலைகள் வீழ்ச்சியடைந்துள்ளதுடன், போஞ்சி மற்றும் கறி மிளகாய் தவிர மலையகம், தாழ்நிலம், யாழ்ப்பாணம் மற்றும் வடமேல் மாகாணங்களின் மரக்கறிகளின் கையிருப்பு குறைந்துள்ளதாக தம்புள்ளை விசேட பொருளாதார வர்த்தக நிலையத்தின் தலைவர் சாந்த ஏக்கநாயக்க தெரிவித்தார்.

ஒரு கிலோ போஞ்சி 400 முதல் 450 ரூபா வரையிலும், ஒரு கிலோ கறி மிளகாய் 600 முதல் 650 ரூபா வரையிலும், ஒரு கிலோ 80 முதல் 90 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்ட கெக்கரி மற்றும் வெள்ளரிக் காய்களின் மொத்த விலை நேற்று முன்தினம் 35 முதல் 40 ரூபா வரையிலும் குறைத்து விற்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

ஒரு கிலோ பச்சை மிளகாய் மொத்த விற்பனை விலையும் 450 ரூபாவில் இருந்து 200 ரூபாவாகக் குறைந்துள்ளது. (அ)

# கிளிநொச்சி குடும்பஸ்தர் கொலை; 11 மாதங்கள் கழித்து ஒருவர் கைது!

கிளிநொச்சி, செப். 20

கிளிநொச்சியில் கடந்த நவம்பர் மாதம் இளம் குடும்பஸ்தர் கொலை செய்யப்பட்டார். இந்தப் படுகொலையுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் 11 மாதங்கள் கழித்து ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டார்.

பரந்தன் - சிவபுரம் பகுதியில் கடந்த நவம்பர் 16 ஆம் திகதி 27 வயதுடைய முத்தையா கேதீஸ்வரன் எனும் ஒரு பிள்ளையின் தந்தை வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் குறித்து கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர். இந்நிலையில், 11 மாதங்கள் கழித்து இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் நேற்று முன்னினம் கைது செய்யப்பட்டார்.

இவரை நேற்று முன்தினம் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். (ஐ)

# கிராமிய இளம் சமூகத்தினருக்கு ஜப்பானின் தொழில்நுட்ப பயிற்சி

## மனுஷ நாணயக்கார கூறுகிறார்

கொழும்பு, செப். 20

குறைந்த வருமானம் பெறும் கிராமிய இளம் சமூகத்திருக்கு ஜப்பான் அரசாங்கம் தொழில்நுட்ப பயிற்சிகளை வழங்க முன்வந்துள்ளது.

தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் மனுஷ நாணயக்கார ஜப்பான் தூதுவர் மிசு கொஸியிடம் கேட்டுக்கொண்டதற்கு அமைவாக ஜப்பான் தூதுவர் மிசு கொஸி, இதனை தெரிவித்தார்.

அதற்கிணங்க தொழில்நுட்ப பயிற்சி மத்திய நிலையம் ஒன்றை ஸ்தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அமைச்சருக்கும் தூதுவருக்கும் இடையிலான சந்திப்பு அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற பொழுது அமைச்சர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

ஜப்பான் தூதுவர் அதற்கு மிக சாதகமான பதிலை வழங்கினார். இதன்மூலம் ஜப்பானில் வேலைவாய்ப்புகளை தேடிச்செல்லும் இலங்கை இளைஞர் யுவதிகளுக்கு சிறந்த வாய்ப்புக்கள் கிட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# பழங்களின் விலை உயர்வு

கொழும்பு, செப். 20

இறக்குமதி செய்யப்பட்ட தோடம்பழம் ஒன்று 600 ரூபாக்கு மேல் விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

விற்பனை நிலையங்களில் ஒரு கிலோ தோடம்பழத்தின் விலை 3075.00 ரூபாக்கு விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ திராட்சை 5,000 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

இறக்குமதி கட்டுப்பாடுகள், இறக்குமதி வரி அதிகரிப்பு, மற்றும் அந்நிய செலாவணி நெருக்கடி போன்ற காரணங்களால் விலை உயர்ந்துள்ளதாக வியாபாரிகள் கூறுகின்றனர். (அ)

# யானைகளுக்கு காகத்திடம் கையேந்தவேண்டிய நிலை

## சஜித் பிரேமதாஸ கிண்டல்

கொழும்பு, செப். 20

ஐக்கிய தேசியக் கட்சியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களும் எதிர்காலத்தில் நெலும் மாவத்தையில், காக்கையிடம் வேட்புமனு பெற வேண்டிய நிலை ஏற்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் சிலர், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவர் மகிந்த ராஜபக்ஷவிடம் சென்று தமது துயரங்களைத் தெரிவிக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும், தற்போதைய ஜனாதிபதியின் கீழ் ஐக்கிய தேசியக் கட்சி அடகு வைக்கப்பட்டுள்ளது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, நாட்டின் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம் பாதுகாக்கப்படும் வரை எந்தவொரு உதவியும் வழங்கப்போவதில்லை என சர்வதேச அமைப்புக்கள் தெரிவித்துள்ளன என்றும் சஜித் பிரேமதாஸ மேலும் கூறினார். (அ)

# வைத்தியசாலைகளில் குவியும் குப்பைகளால் மக்களுக்கு பாதிப்பு

கொழும்பு, செப். 20

வைத்தியசாலைகளில் இருந்து தொற்றும் கழிவுகளை அகற்றும் பணிகள் முறையாக மேற்கொள்ளப்படாமையால், கொடிய நோய்கள் பரவும் அபாயம் இருப்பதாக, நாட்டின் சுகாதார ஊழியர்களின் முன்னணி சங்கம் எச்சரித்துள்ளது.

"தொற்றுக் கழிவுகள் குவிந்து, அந்த கழிவுகளை முறையாக அகற்றாததால், ஒட்டுண்ணி தொற்று, நுரையீரல் தொற்று, பக்டீரியா மூளைக்காய்ச்சல், எச்.ஐ.வி, ஹெபடைடிஸ் பி, ஹெபடைடிஸ் சி, பூஞ்சை தொற்று மற்றும் பக்டீரியா (இரத்த ஓட்டத்தில் பக்டீரியா) உள்ளிட்ட தேவையற்ற பிரச்னைகளுக்க முகம் கொடுக்க நேரிடலாம். நோயாளர்களிடமிருந்து தொற்றுக்குள்ளான கழிவுகளை அகற்றும் பணி தனியார் துறை நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், ஒரு கிலோ தொற்று கழிவுகளை அகற்றுவதற்கு நூறு ரூபா பணம் போதாது எனவும் சுகாதார நிபுணர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தத் தொகை 2017ஆம் ஆண்டு தீர்மானிக்கப்பட்டது, அப்போது ஒரு லீற்றர் டீசலை 85 ரூபாய்க்கு பெற்றுக்கொள்ள முடியும். மின்சாரம், தண்ணீர் போன்ற அனைத்து பொருட்களின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளதால், சம்பந்தப்பட்ட நிறுவனம் ஒப்புக் கொண்ட விலையை அரசு உயர்த்த வேண்டுமென அந்த சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

கழிவுகளை அகற்ற தேவையான டீசல் விநியோகம் கிடைக்காததாலும், நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையாலும், கடந்த வாரம் பல வைத்தியசாலைகளில் நோய்த் தொற்று கழிவுகள் குவிந்துள்ளதாக சுகாதார நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

இந்நிலைமைக்கு தீர்வு வழங்கப்படாததாலும், கழிவுகளை அகற்றும் நடவடிக்கைகள் முற்றாக தனியார் மயமாக்கப்பட்டதாலும், வைத்தியசாலை மட்டத்தில் கழிவுகளை குவிப்பதைத் தவிர வேறு எந்த மாற்று வழியையும் கண்டுபிடிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக நிபுணர் மேலும் கூறினார். (அ)

# பேராதனைப் பல்கலைக்கழக மாணவனைக் காணவில்லை

## விடுதியிலிருந்து கடிதம் கண்டெடுப்பு

கொழும்பு, செப். 20

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் கலைப்பீடத்தில் நான்காம் ஆண்டில் கல்வி கற்கும் மாணவன் ஒருவர் காணாமல்போயுள்ளார்.

நேற்று பேராதனைப் பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம், இது தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யக்கல பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய அஞ்சன குலதுங்க என்ற மாணவனே காணாமல்போயுள்ளார்.

குறித்த மாணவன் கடந்த 16ஆம் திகதி எழுதினார் என்று சந்தேகிக்கப்படும் கடிதம் ஒன்றை அவர் தங்கியிருந்த விடுதியில் இருந்து பொலிஸார் கண்டெடுத்துள்ளனர்.

இந்த மாணவன் தொடர்பில் இதுவரை எவ்வித தகவலும் வெளியாகவில்லை என்பதுடன், சம்பவம் தொடர்பில் பேராதனைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# பயங்கரவாதத் தடை சட்டத்துக்கு எதிராக அனுராதபுரத்தில் கையெழுத்து வேட்டை!



கொழும்பு, செப். 20

இலங்கையில் மக்களை வதைக்கும் கொடிய பயங்கர வாதத் தடைச் சட்டத்துக்கு எதிராகக் கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கை நேற்று அனுராதபுரம் பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினரு மான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தலைமை யில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கூட்டமைப்பின் பாராளு மன்ற உறுப்பினர் இரா.சாணக் கியன், மதகுருமார்கள், மூவின மக்கள் எனப் பலரும் இதில் பங்கேற்றனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறு வலியு றுத்தி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி, சர்வஜன நீதி அமைப்பு, தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புக்களின் கூட்டமைப்பு ஆகியவற்றின் ஏற்பாட்டில் நாடளாவிய ரீதியில் ஊர்தி வழிப் போராட் டமாகச் சென்று கையெழுத் துத் திரட்டும் நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டு வருகின் றமை என்பது குறிப்பிடத்தக் கது. (அ)

# வீழ்ச்சியடையும் மின் உற்பத்தி!

கொழும்பு, செப். 20

நாட்டில் தற்போதைய நாட் களில் போதிய மழையில்லாத காரணத்தினால் நீர் இருப்பு படிப்படியாக குறைவடைந் துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

அதன்படி 85 சதவீதமாக இருந்த தண்ணீர் கையிருப்பு தற்போது 80 சதவீதமாக குறைந்துள்ளது.

கடந்த சில வாரங்களாக போதிய மழை பெய்ததன் காரணமாக கிட்டத்தட்ட 80 சதவீத மின்சார உற்பத்தி நீரால் செய்யப்பட்டதாக பொறியியலாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். ஆனால், தற்போது தண்ணீரும் மட்டுப் படுத்தப்பட்டு விட்டதாக தெரிவித்துள்ளனர்.

இந்த நீர் இருப்பு இன்னும் குறையும் அபாயம் உள்ளதால், தற்போதுள்ள இருப்புகளை பாதுகாக்க வேண்டியது அவசி யம், எனவே இந்த நேரத்தில் மின் உற்பத்தி நிலையங்க ளுக்கு தேவையான எரி பொருள், நிலக்கரியை விரை வில் வழங்குவது அவசியம் என அவர்கள் சுட்டிக்காட்டு கின்றனர். (அ)

# 4 சிசுக்களை பிரசவித்த தாயாருக்கு நிதி உதவி

மட்டக்களப்பு, செப். 20

ஒரே சூலில் 4 சிசுக்களைப் பிரசவித்த தாய்க்கு, தியாகி அறக்கொடை நிதியத்தின் ஸ்தாபகத் தலைவர் வாம தேவன் தியாகேந்திரன், சிசுக் களின் பராமரிப்பிற்காக ஒரு இலட்சம் ரூபாய் உதவித் தொகை வழங்கியுள்ளார்.

கல்குடா மீடியா போரம் பணிப்பாளரும் ஊடகவியலா ளருமான எம்.ரீ.எம். பாரிஸ் மூலம் தாயிடம் இந்த நிதியு தவித் தொகை வழங்கிவைக்கப் பட்டது.

புத்தளம், கல்பிட்டி பிர தேச செயலாளர் பிரிவின் ஹூசைனிய்யா புரத்தை சேர்ந்த 24 வயதான இளம் தாய் ஒருவர், கடந்த மாதம் 27ஆம் திகதி ஓர் ஆண், மூன்று பெண் என நான்கு சிசுக்களை ஒரே சூலில் பிரசவித்திருந்தார்.

அக்குடும்பத்தின் ஏழ்மை நிலையைக் கருத்தில்கொண்டு, நாடளாவிய ரீதியில் இன, மத வேறுபாடின்றி பல்வேறு மனிதாபிமானப் பணிகளை மேற்கொண்டு வரும் தியாகி அறக்கொடை நிதியம் உதவ முன்வந்து, முதல் கட்டமாக மேற்படி ஒரு இலட்சம் ரூபாயை வழங்கியுள்ளது. (அ)

# உலக உணவு திட்ட அறிக்கையை மறைக்கிறார் விவசாய அமைச்சர்

## சஜித் குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 20

இந்நாட்டில் 63 இலட்சம் பேர் உணவுப் பற்றாக் குறையை எதிர்நோக்குவதாக தெரிவித்து உலக உணவு திட் டம் வெளியிட்டுள்ள அறிக் கையை விவசாய அமைச்சர் மறைத்துச் செயற்படுகின்றார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரி வித்துள்ளார்.

மக்கள் எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியை நிவர்த்தி செய்வதற்காக தாம் ஒரு போதும் கூட்டு அரசாங் கத்தினை அமைக்கப்போவ தில்லை.

அது மாத்திரமின்றி மக்க ளின் ஆணையை பெற்றுக் கொண்டு ஒருபோதும் அத னைக் காட்டிக்கொடுக்கும் திட்டங்களை முன்னெடுக்கப் போவதில்லை எனவும் சஜித் கூறினார். (அ)

# மன்னாரிலும் கவனவீர்ப்பு



மன்னார், செப். 20

வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வை நோக்கிய பயணத்தில் 50 வது நாளை முன்னிட்டு நேற்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் மன்னார் கீரி கடற்கரைப் பகுதியில் கௌர வமான அரசியல் தீர்வை வலியுறுத்தி பட்டம் ஏற்றப் பட்டது.

கௌரவமான உரிமைகளு டன் கூடிய அரசியல் தீர்வுக் கான மக்கள் குரல்" எனும் தொனிப் பொருளில் வடக்கு - கிழக்கில் உள்ள 8 மாவட்டங் களில் 100 நாட்கள் நடைபெற உள்ள செயல் திட்டத்தின் 50 ஆவது நாள் கவனயீர்ப்பு போராட்டம் வடக்கு- கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் மன்னார் கீரி கடற்கரைப் பகுதியில் இடம் பெற்றது.

சிறுவர்கள், ,சிவில் அமைப் புக்கள் மற்றும் பெண்கள் இணைந்து எமக்கு நிரந்தர மான அரசியல் உரிமை வேண் டும் உள்ளிட்ட கோரிக்கை களை முன் வைத்தனர். (அ)

# பெற்றோரை பராமரிக்க மாதாந்தம் 2 இலட்சம் ரூபா கேட்கும் மகள்கள்

## 7 பிள்ளைகளை பெற்ற தந்தை பொலிஸில் முறைப்பாடு

கொழும்பு, செப். 20

82 வயதுடைய ஏழு பெண் பிள்ளைகளின் தந்தை யொருவர், தம்மைப் பராம ரிப்பதற்காக தனது மகள்கள் 200,000 ரூபாவைக் கோருவ தாக பாதுக்க பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

தனக்கு உதவுமாறு அவர் பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்தார்.

தன்னிடமிருந்த ஒரே காணியை விற்று, சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்கான மருத்துவச் செலவை செய்த துடன், மீதி ரூ.400,000 அவ ரது இளைய மகளிடம் வழங் கப்பட்டது.

அப்போது, இளைய மகளும், கணவரும் வாடகை வீட்டில் தங்கியிருந்தனர். அந்த வீட்டிலேயே, முறைப் பாடு செய்த தந்தையும், தாயும் தங்கியிருந்தனர்.

எனினும், சிறிது நாளில இளைய மகள் குடும்பம் அந்த வீட்டிலிருந்து வெளியேறிச் சென்று விட் டது.

பொலிஸார் அவரது மகள்களை வரவழைத்து, அவர்கள் அனைவரும் நன் றாக வாழ்கிறார்கள் என்ப தைக் கண்டறிய மனுவை விசாரித்தனர்.

வயோதிப தந்தையை கவனித்துக் கொள்ளவேண் டிய கடமை குறித்து அவர் களுக்கு விளக்கமளித்த பொலிஸ் பொறுப்பதிகாரி கபில சேனாநாயக்க, அவ் வாறு செய்ய மறுத்தால் நீதிமன்றத்தின் ஊடாக பிரச் னைக்கு தீர்வு காண நட வடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்..

இதனையடுத்து, பிலியந் தலை பிரதேசத்தில் வசிக்கும் மகள்களில் ஒருவர் தனது தந்தையை கவனிக்கும் பணியை மேற்கொண்டுள் ளார். (அ)

# இரத்மலானை விமான நிலைய சேவைகள் இடைநிறுத்தம்!

கொழும்பு, செப். 20

சர்வதேச விமான நிலையங் களின் ஒன்றான இரத்மலானை விமான நிலைய சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் 27ஆம் திகதி முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்பட்ட இந்த விமான நிலையம் 220 மில்லி யன் ரூபா செலவில் நவீனமய மாக்கப்பட்டு தயார்ப்படுத்தப் பட்டது.

இதற்கமைய வாரத்திற்கு மூன்று தடவைகள் மாலைதீவு விமானங்கள் அங்கு தரை யிறங்கியதோடு தற்போது அந்த விமானங்கள் அனைத் தும் நிறுத்தி வைக்கப்பட்டுள் ளதாக கூறப்பட்டுள்ளது.(அ)

# தமிழரசின் தவறான தீர்மானங்களால் திருகோணமலை பறிபோகும் அபாயம்!

## மத்தியகுழுக் கூட்டத்தில் காட்டம்

வவுனியா,செப்.20

**இலங்கை தமிழ் அரசு கட்சி எடுத்த தவறான அரசியல் தீர்மானங்களினால், திருகோணமலை தமிழ் மக்கள் அநாதரவாகியுள்ளனர். திருகோணமலை நிலம் பறிபோய்க்கொண்டிருக்கிறது என திருகோணமலையைச் சேர்ந்த குழுவொன்று, இலங்கை தமிழ் அரசு கட்சியின் மத்தியகுழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.**

இலங்கை தமிழ் அரசு கட்சியின் மத்தியகுழுக் கூட்டம் நேற்று முன்தினம் வவுனியாவில் நடைபெற்றது.

இதன்போது, திருகோணமலையை சேர்ந்த சிவில் அமைப்பு பிரதிநிதிகள் குழுவொன்று, விளக்கமளிக்க வந்திருந்தது.

திருகோணமலைக்கு செயலற்ற எம்.பியொருவர் தெரிவாகியுள்ளதால், மாவட்டத்தில் தமிழ் மக்களின் இருப்பே பறிபோகும் நிலையேற்பட்டுள்ள போதும், பாராளுமன்றத்தில் குரல் கொடுக்கவோ, வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளவோ முடியாமல் உள்ளதை சுட்டிக்காட்டினர்.

இரா.சம்பந்தன் எம்.பியாக இருக்கவேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்பினால், அதை நாம் எதிர்க்கவில்லை. அவரை விலகும்படியும் வலியுறுத்தவில்லை. ஆனால், மாவட்டத்திற்குரிய செயலூக்கமான பிரதிநிதித்துவம் அவசியம் எனச் சுட்டிக்காட்டினர்.

திருகோணமலை கோணேச்சரர் ஆலய விவகாரம், நில அபகரிப்பு விவகாரம் உள்ளிட்ட மாவட்டத்தின் பிரச்சனைகளை பட்டியலிட்டு, அவை பற்றி தமிழ் தேசிய கூட்டமைப்பு கண்டுகொள்ளாமல் உள்ளதையும் சுட்டிக்காட்டினர்.

இதையடுத்து, இலங்கை தமிழரசுக் கட்சியின் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இரா.சம்பந்தனுடன் கலந்துரையாடி, பிரச்னைகளை எப்படி சமாளிப்பதென்பது பற்றி அந்தக்குழு ஆராயும்.

அந்த குழுவில் மாவை சேனாதிராசா, சீ.வீ.கே.சிவஞானம், எம்.ஏ. சுமந்திரன், ப.சத்தியலிங்கம் ஆகியோர் அங்கம் வகிக்கிறார்கள். (அ)

## மருந்துகள், சத்திர சிகிச்சைகளுக்கான உபகரணங்களுக்கு பாரிய பற்றாக்குறை!

கொழும்பு, செப். 20

அத்தியாவசிய ஔடதங்கள் மற்றும் சத்திர சிகிச்சைகளுக்கான உபகரணங்களுக்கு பாரிய பற்றாக்குறை நிலவுவதாக அகில இலங்கை வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஜயந்த பண்டார தெரிவித்துள்ளார்.

நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், இருதய நோய்களுக்கான அத்தியாவசிய ஔடதங்களுக்கு அரச வைத்தியசாலைகளில் பாரிய பற்றாக்குறை காணப்படுவதாகவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

மேலும் மாதாந்த மருத்துவ சிகிச்சைகளுக்காக வருகை தரும் கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் நோயாளர்கள் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

ஔடத பற்றாக்குறையானது தற்போது தேசிய வைத்தியசாலைகளில் மாத்திரமின்றி கிராமிய வைத்தியசாலைகளிலும் காணப்படுகின்றது.

அத்துடன் ஔடதங்களுக்கான விலையினை கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டியது சுகாதார அமைச்சின் பொறுப்பாகும்.

நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், மற்றும் கொலஸ்ற்றோல் ஆகிய நோய்களுக்காக பெற்றுக்கொள்ள வேண்டிய குறைந்த பட்ச ஔடதங்களான 50 மில்லிகிராம் எடையுடைய லொசாட்டன், மெட்போமின், உள்ளிட்ட ஔடதங்களையேனும் பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

இதனால் நோயாளர்கள் ஔடதங்கள் இன்றி வாழக்கூடிய நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர் எனவும் அகில இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் ஜயந்த பண்டார தெரிவித்தார். (அ)

## மனம் மாறிய மைத்திரி



கொழும்பு, செப். 20

கட்சியின் முடிவுக்கு கட்டுப்படாமல் அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சு பதவிகளை பெற்றுக்கொண்ட எம்.பிக்களுக்கு எதிராக ஶ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமா என்ற கேள்விக்கு மழுப்பல் போக்கில் பதிலளித்துள்ளார் கட்சி தலைவரான மைத்திரிபால சிறிசேன.

சர்வகட்சி அரசாங்கம் அமையும்வரை அமைச்சு பதவிகள் எதையும் ஏற்பதில்லை என ஶ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானம் எடுத்துள்ளது.

எனினும், அந்த முடிவை கடாசித்தள்ளி விட்டு, கட்சியின் 8 எம்.பிக்கள் இதுவரை அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சுகளை பொறுப்பேற்றுள்ளனர். இவர்களில் சாந்த பண்டார, சுரேன் ராகவன் ஆகிய இருவருக்கு எதிராக மட்டுமே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏனையோருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுப்பதற்கு சுதந்திரக்கட்சி தீர்மானித்துள்ளது என தகவல்கள் வெளியாகின.

இந்நிலையில் இது தொடர்பில் கட்சித் தலைவரான மைத்திரிபால சிறிசேனவிடம் நேற்று முன்தினம் கேள்வி எழுப்பட்டது.

இதற்கு பதிலளித்த அவர், ” ஒழுக்காற்று நடவடிக்கையை விடவும் நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்னைக்கு தீர்வை தேடுவதே முக்கியத்துவம் மிக்க விடயமாகும்.”-என கூறி சமாளித்தார். (அ)

## தனது இரண்டரை வருடச் சம்பளத்தையும் நலத்திட்டங்களுக்கு வழங்கும் கருணாதாஸ!

கொழும்பு, செப். 20

மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கருணாதாஸ கொடித்துவக்கு தனது இரண்டரை வருடங்களுக்கான சம்பளம் உள்ளிட்ட ஏனைய அனைத்து கொடுப்பனவுகளையும் மீண்டும் மக்களுக்கான நலத்திட்டங்களுக்கு வழங்க தீர்மானித்துள்ளார்.

இதற்கமைய கடந்த 2020 ஆம் ஆண்டு முதல் பெற்றுக்கொண்ட கொடுப்பனவுகள் மற்றும் வேதனத்தை இவ்வாறு மீண்டும் வழங்கவுள்ளதாக மாத்தறை - அக்குரெஸ்ஸ பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தலின் போது தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இதனை குறிப்பிட்டிருந்ததாகவும், அதற்கு இணங்கவே தாம் இந்த தீர்மானத்தினை மேற்கொண்டுள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் கருணாதாஸ கொடித்துவக்கு தெரிவித்துள்ளார். (அ)

## மாமடுப் பகுதியில் காட்டுத்தீ பரவல்

வவுனியா, செப். 20

வவுனியா மாமடு பகுதியிலுள்ள காட்டுப்பகுதியில் நேற்று முன் தினம் மாலை 5.00 மணியளவில் ஏற்பட்ட தீப்பரவல் பலமணிநேர போராட்டத்துக்கு மத்தியில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

மாமடு சூரிய மின் உற்பத்தி நிலையத்திற்கு அருகேயுள்ள காட்டுப்பகுதியில் திடீரென தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

அதனையடுத்து சூரிய மின் உற்பத்தி நிலையத்தில் பணியாற்றும் ஊழியர்கள் நகரசபை தீயணைப்பு பிரிவினர் மற்றும் பொலிஸாருக்கும் தகவல் வழங்கியமையடுத்து அவ்விடத்துக்கு விரைந்த குழுவினர் பல மணிநேர போராட்டத்திற்கு மத்தியில் தீயினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

தீ விபத்து திட்டமிட்டவகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதா அல்லது காற்றின் காரணமாக ஏற்பட்டுள்ளதா போன்ற பல்வேறு கோணத்தில் மாமடு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

## முன்னாள் எம்.பிக்கள் செலுத்தவேண்டிய நீர்க் கட்டணம் பத்து மில்லியன் ரூபா!

கொழும்பு, செப். 20

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், உயிரிழந்த நாடாளுமன்ற உறுப்பினர்களால், 10 மில்லியன் ரூபாய் நீர் கட்டணம் செலுத்தவேண்டியுள்ளதாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி சிங்கள ஊடகம் ஒன்று இதனை தெரிவித்துள்ளது.

இதற்கமைய தற்போதும் பாராளுமன்றை பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய பாராளுமன்ற உறுப்பினர்கள் 03 மில்லியன் ரூபாவும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் 04 மில்லியன் ரூபாவும், உயிரிழந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் 03 மில்லியன் ரூபாவும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு செலுத்த வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நிலுவைத் தொகையினை பெற்றுக்கொள்வதற்காக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அதிகாரிகள், பொது நிர்வாக அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# இலங்கை பொருளாதார நெருக்கடி:

# அரசு ஊழியர்கள் அரசுக்கு சுமையாக உள்ளனரா?

**யூ.எல். மப்றூக்**



இலங்கையில் தற்போது நிலவும் மிக மோசமான பொருளாதார நெருக்கடியில் அரசு பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குவதில் அரசு தடுமாறிக் கொண்டிருப்ப தைக் காண முடிகிறது. இதனால், அரசு ஊழியர்களின் எண்ணிக்கையை எவ் வகையிலாவது குறைக்க வேண்டும் என்பதில் அரசு கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றது.

இந்த நிலையில் நாட்டிலுள்ள 16 லட்சம் அரச ஊழியர்களில் 10 லட்சம் பேர் திறனுடன் செயற்படுவ தில்லை என, அண்மையில் அமைச்சர் ரொஷான் ரண சிங்க தெரிவித்திருந்தார். இந்தப் புள்ளி விவரத்தை அவர் எங்கிருந்து பெற்றார் எனத் தெரிவிக்கவில்லை.

இவ்வாறான நிலையில், 60 வயதையடைந்துள்ள அரச ஊழியர்களை - எதிர்வரும் டிசம்பர் மாத முடி வுக்குள் பணியிலிருந்து ஓய்வு பெறுமாறு அரசு அறி வித்துள்ளது. இடைக்கால வரவு - செலவுத் திட்டத் தின் போது நிதியமைச்சர் எனும் வகையில் ஜனாதி பதி இந்த அறிவிப்பை விடுத்திருந்தார்.

கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியில் நிதியமைச் சராக இருந்த பசில் ராஜபக்ஷ, அரச ஊழியர்களின் ஓய்வுபெ றும் வயதை 60இல் இருந்து 65 ஆக அதிகரித்திருந்தார். ஆயினும் அரச ஊழியர்களின் ஓய்வு பெறும் வயதை 60 என ரணில் விக்ரமசிங்க அரசாங்கம் அறிவித்துள்ளதோடு, அந்த வயதைக் கடந்தோர் அனைவரும் டிசம்பர் 31ஆம் திகதிக்குள் ஓய்வுபெறுமாறும் அறிவித்துள்ளது.

இதற்கமைவாக 20 ஆயிரத்திலிருந்து 25 ஆயிரத்துக்குள்ளான எண்ணிக்கையி லானோர் - அரச சேவையிலிருந்து ஓய்வு பெறுவர் என, பொது நிர்வாக அமைச்சு தெரிவித்திருக்கிறது.

இது இவ்வாறிருக்க, அரசு ஊழியர்கள் சம்பளமற்ற விடுமுறையைப் பெற்று, வேலைவாய்ப்பின் பொருட்டு வெளி நாடுகளுக்குச் செல்வதற்கான அனு மதியை ஏற்கனவே அரசு அறிவித்திருந்த நிலையில், தற்போது சம்பளமற்ற விடு முறையை அரச ஊழி யர்கள் பெற்றுக் கொண்டு, நாட்டில் இருந்தவாறு தனிப்பட்ட தொழில்களில் ஈடுபடுவதற்கான அனு மதியை வழங்குவதற்கும் அரசு தீர்மானித்துள்ளது.

இவை அனைத்தும் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் அரசு ஊழியர்களின் எண்ணிக்கையி னைக் குறைப்பதற்கான நடவடிக்கையாகவே உள்ளன.

**இலங்கை அரசு ஊழியர்களின் தொகை**

இலங்கையில் அரசு ஊழியர்களின் எண்ணிக்கை 16 லட்சம் என, அமைச்சர் ரொஷான் ரணசிங்க கூறி யுள்ள போதும், நிதியமைச்சின் 2021ஆம் ஆண்டுக் கான அறிக்கையில் அரச ஊழியர்களின் எண்ணிக்கை 14,01,260 என குறிப்பிடப்பட்டுள்ளது. 2020ஆம் ஆண்டு அரச ஊழியர் எண்ணிக்கை 14,23,116 என் றும், 2021இல் அந்தத் தொகை 21,856ஆல் குறைவ டைந்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட் டப்பட்டுள்ளது.

குறித்த ஆண்டறிக்கையின் பிரகாரம் கணக்கிடும் போது 2,21,56,000 மக்கள் தொகையினைக் கொண்ட இலங்கையில் 15 பேருக்கு ஒருவர் அரச ஊழியராக உள்ளனர்.

இந்த நிலையில் மக்கள் தொகைக்கு ஏற்ப - அரச ஊழியர்களின் விகிதம் அதிகமாக உள்ளது என, நிதியமைச்சின் மேற்படி ஆண்ட றிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

இதேவேளை நிறுவனங்களுக்குள்ளே காணப்படும் தொழிற்படையின் சமமற்ற பகிர்வினால் நகரப்பகுதிகளில் அரச ஊழி யர்கள் அதிகளவில் குவிந்துள்ளனர் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



**அரச ஊழியர்களுக்கான செலவு**

அரச ஊழியர்களுக்கான சம்பளம் மற்றும் ஓய்வூதி யம் பெறுவோருக்கான கொடுப்பனவு ஆகியவற் றுக்காக அரச வருமானத்தில் சுமார் 75 சதவீதமான தொகையை அரசு செலவிட் டுள்ளதாக 2021ஆம் ஆண்டுக்கான நிதிய மைச்சின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஏறக்குறைய 15 லட்சம் அரசு ஊழியர் களும், 6,72,196 ஓய்வூதியம் பெறுவோரும் நாட்டில் உள்ளனர் என அந்த அறிக்கை குறிப்பிடுகிறது.

அரசு ஊழியர்களுக்கான ஊதிய செலவு கடந்த வருடம் 845.7 பில்லியன் ரூபாயாக இருந்தது. அதே வேளை ஓய்வுபெற்றோருக்கான ஊதியக் கொடுப் பனவு 269.8 பில்லியன் ரூபாயாக காணப்பட்டது.



2021இல் சம்பளம் மற்றும் ஓய்வூ திய கொடுப்பனவுகளுக்காக ரூபாய் 1,115 பில்லியனை செலுத்திய பிறகு, அரசின் வருமானத்தில் மிகுதியாக ரூபாய் 348 பில்லியன்களே மிகுதி யாகக் காணப்பட்டது.

இத்தகைய நிலைமையானது பொதுத்துறையில் குறிப்பாக மனித வள முகாமைத்துவத்திலும் ஏனைய துறைகளிலும் சீர்திருத்தங்களை வேண்டி நிற்கின்றது என, நிதிய மைச்சு தெரிவிக்கின்றது.

**“அரசியல் நோக்கங்களுக்காக தொழில்கள் வழங்கப்படுகின்றன”**

இந்த விடயங்கள் குறித்து தென் கிழக்குப் பல்கலைக்கழக பொருளி யல்துறை தலைமைப் பேராசிரியர் ஏ.எல். ரஊபிடம் பேசிய போது “அரச ஊழியர்கள் இப்போது அரசுக்கு சுமை யாக அமைந்து விட்டார்கள்” என்றார்.

“ஒரு நிறுவனம் வளர்ச்சியடையும் போதுதான் - அங்கு ஊழியர்கள் மென் மேலும் சேர்க்கப்படுவார்கள். அது போலவே ஒரு நாடு பொருளாதார ரீதி யில் வளர்ச் சியடையும் போதுதான் அரச ஊழியர்கள் நியமிக் கப்பட வேண்டும். ஆனால், இலங்கையில் அவ்வாறு நடை பெறுவதில்லை. பொருளாதார வளர்ச்சி மந்த நிலையில் இருக்கும் போதும், பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து கொண்டிருக்கும் போதும் ஊழியர்களை அரசு அதிகரித்தது” எனக் கூறிய அவர், “அரசியல் நோக்கங்களுக்காகவே அதிகமானவர்ளுக்கு அரச தொழில்கள் வழங்கப்பட்டன” எனவும் குறிப் பிட்டார்.

உற்பத்தியை அதிகரிப்பது பற்றி யோசியாமல், அபி விருத்தி சார்ந்த கொள்கைகளை முன்வைக்காமல் - ஊழி யர்களை மட்டும் அரசு உள்வாங்கிக் கொண்டதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

அதன் விளைவாகவே தேசிய வருமானத்தின் அதிகமான தொகையை ஊழியர்களுக்கு சம்பளமாக வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும், பொருளாதார நெருக்கடி உச்சத்தில் இருந்த காலகட் டத்தில் பணத்தை அச்சிட்டே அரச ஊழியர்களுக் கான சமபளத்தை வழங்க வேண்டியிருந்தது எனவும் அவர் தெரிவித்தார்.

வேலை வாய்ப்பை அதிகரிப்பதற்கான நடவடிக் கைகளை அரசு செய்ய வேண்டும் எனக் கூறும் அவர் “இலங்கையில் பொருத்தமான வேலைக்கு பொருத்த மான நபர்கள் அநேகமாக உள்வாங்கப்படுவதில்லை” என்றும், “கல்விக் கொள்கையிலுள்ள குறைபாடுகள் தான் இதற்குக் காரணம்” எனவும் குறிப்பிடுகின்றார்.

(09 ஆம் பக்கம் பார்க்க...)

# தமிழகத்தில் மின் கட்டணம் உயர்வு: மோசமடையும் தமிழக நிதி நிலைமை!

நா.குருசாமி

தமிழகத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு பொறுப்பேற்று ஓராண்டுக்கு மேலாகிவிட்ட நிலையில், மாநிலத்தின் நிதி நிலைமை இன்னும் முழுமையாகச் சீரடையாததால், தேர்தலின் போது அளித்த பல வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத சிக்கலில் தவித்து வருகிறது.

இந்தச் சிக்கலிலிருந்து மீள்வதற்கான வழி தெரியாமல், தான் சுமந்து வரும் அதிகப்படியான சுமையை மக்கள் மீது இறக்கி வைக்கும் சூழலுக்குத் தள்ளப்பட்டுள்ளது. அந்த வகையில், ஏற்கெனவே சொத்து வரி, பால் பொருள்கள் விலை உயர்வை அறிவித்த அரசு, தற்போது மின்சாரக் கட்டணத்தையும் அதிகரித்துள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக கொரோனா பெருந்தொற்றால் பாதிக்கப்பட்டு வாழ்க்கைச் செலவினங்களை எதிர்கொள்ள முடியாமல் தவித்து வரும் ஏழை, நடுத்தர வருவாய் ஈட்டும் மக்கள் அரசின் இத்தகைய நடவடிக்கைகளால் மேலும் இன்னல்களை எதிர்கொள்ள நேரிடும் என்பதில் சந்தேகமில்லை.

கடந்த எட்டு ஆண்டுகளாக மின்சாரக் கட்டணம் பெரிய அளவில் உயர்த்தப்படவில்லை. 2014-ஆம் ஆண்டு அதிமுக ஆட்சியின் போது மின்சாரக் கட்டணம் முழுமையாக மாற்றி அமைக்கப்பட்டது. அதன்பிறகு, கடந்த 2017-இல் மிகச் சிறிய அளவில் மின் கட்டணம் உயர்த்தப்பட்டது.



தற்போதைய மின் கட்டண உயர்வு, கடந்த 10-ஆம் திகதிமுதல் அமலுக்கு வந்துள்ளது. மின் வாரியத்தின் பரிந்துரைகளை ஏற்று, மின்சார ஒழுங்குமுறை ஆணை யம் இந்தக் கட்டண உயர்வுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

குடிசை வீடு, விவசாயம் இவற்றுக்கு இலவச மின் சாரம் தொடர்ந்து வழங்கப்படும். இதேபோல, கைத் தறி, விசைத்தறிக் கூடங்ககளுக்கு வழங்கப்படும் மின் சார மானியம் தொடரும் என்றும் அறிவிக்கப்பட்டுள் ளது.

தமிழகம் மட்டுமல்லாது, பிற மாநிலங்களின் மின் வாரியங்களும் கடும் நிதி நெருக்கடியில் சிக்கியுள்ளதால், மின்சாரக் கட்டணத்தை உயர்த்துவதைத் தவிர்க்க முடியாது என்பது உண்மைதான்.

ஆனால், மின் கட்டணத்தை திடீரென மிக அதிக ளவில் உயர்த்துவதற்குப் பதிலாக, ஆண்டுதோறும் சிறிதளவு அதிகரிப்பு என்ற முறையை மின் வாரியம் கடைப்பிடித்திருந்தால் மக்கள் அதிகப்படியான இன்னல்களை எதிர்கொள்ள வேண்டியிருக்காது.

தமிழகத்தில் தற்போது சுமார் 3.5 கோடி மின் இணைப்புகள் உள்ளன. மின் உற்பத்தி, விநியோகம், ஊழியர்களுக்கான ஊதியம் ஆகியவற்றுக்காக மின் வாரியம் ஒரு யூனிட்டுக்கு ரூ. 9 செலவிடுகிறது. ஆனால், ஒரு யூனிட் மின்சாரத்தின் மூலம் அதற்குக் கிடைக்கும் வருவாய் ரூ. 7 மட்டுமே.

இதனால், தமிழ்நாடு மின் வாரியத்தின் கடன் சுமை தற்போது ரூ. 1,50,000 கோடியாக உயர்ந்துள்ளது. இந்தக் கடன்களுக்கான வட்டியாக ஆண்டுக்கு ரூ.16,500 கோடியை மின் வாரியம் செலுத்துகிறது.

விவசாயம், குடிசை வீடுகளுக்கு இலவசமாகவும் கைத்தறி, விசைத் தறிக் கூடங்களுக்கு மானிய விலையிலும் மின்சாரம் வழங்க வேண்டியுள்ளதால், இந்தக் கடன் சுமையிலிருந்து மின் வாரியம் மீள்வது அவ்வளவு எளிதானல்ல.

இந்த உண்மை நிலவரத்தைப் புரிந்து கொள்ளா மல், அரசியல் லாப நோக்கத்துக்காக மேலும் மேலும் இலவசங்களை வாரி இறைக்கும் மாநில அரசுகளின் போக்கால் மின் வாரியங்களின் நிதி நிலைமை இன்னும் மோசமடையும் என்பதை மறுக்க வியலாது. அரசுடைமை வங்கிகள் வாராக்கடன் பிரச்னைகளி லிருந்து மீள்வதற்கு மத்திய அரசு கடந்த 5 ஆண்டு களில் மொத்தம் ரூ. 5 லட்சம் கோடிக்கு மேல் கடன் களைத் தள்ளுபடி செய்துள்ளது.

இதே போல, அனைத்து மாநில மின் வாரியங்களும் கடன் சுமையிலிருந்து மீள்வதற்கான வழிவகைகளை மத்திய அரசு கண்டறிய வேண்டும். மத்திய அரசு வகுத்தளிக்கும் விதிகளைப் பின்பற்றி, மின் வாரியங்களின் நிதி நிலைமை சீரடைய மாநில அரசுகளும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். இதைவிடுத்து, மக்களின் மீது மேலும் மேலும் சுமையை ஏற்றுவது எந்த விதத்திலும் ஏற்புடையதல்ல.

# இலங்கை பொருளாதார....

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

“மக்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குவதற்கான பொறுப்பு அரசுக்கு உள்ளது. அதற்காக அரச தொழில்களைத்தான் வழங்க வேண்டுமென்று கிடையாது. பொருத்தமான தொழில் அறிவினையும் பயிற்சிகளையும் நபர்களுக்கு வழங்குவதன் ஊடாக, அவர்களை தொழிற் சந்தைக்குப் பொருத்தமானவர்களாக அரசு உருவாக்க முடியும்”, என்றார்.

**இந்தியா முன்னுதாரணம்**

“இந்தியா இதைத்தான் செய்கிறது. இந்தியா - தனது மனித வளத்தை வெளிநாட்டு வேலை வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்ளும் வகையிலும் உருவாக்குகிறது. வெளிநாடுகளிலுள்ள வேலை வாய்ப்புகளை அடையாளம் கண்டு, அவற்றுக்கு ஏற்றால்போல் தனது நாட்டின் தொழிற் படையை இந்தியா உருவாக்குகிறது.”

இதற்கு காரணம், வெளிநாட்டு தொழிற் சந்தைக்குத் தேவையான வகையில் இந்தியா - ஒவ்வொரு துறையிலும் ஆளணியினரை அறிவூட்டி, பயிற்சியளித்து வருகின்றது. அதனால், வெளிநாட்டில் தொழில் வாய்ப்புகளைப் பெறுவதற்குப் பொருத்தமானவர்களாக அவர்கள் உள்ளனர். ஆனால் இலங்கையில் அப்படியில்லை. இலங்கையிலிருந்து வீட்டுப் பணிப் பெண்களாகவே மத்திய கிழக்கு நாடுகளுக்கு அதிகளவானோர் சென்றுள்ளனர்” என தலைமைப் பேராசிரியர் ரஊப் விவரித்தார்.

இலங்கையின் கல்விக் கொள்கையில் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தினார்.

“இலங்கையின் எந்தப் பல்கலைக்கழகத்தில் நாட்டுக்குப் பொருத்தமான கல்விக் கொள்கை உள்ளது?” என கேள்வியெழுப்பும் அவர் “வேலை வாய்ப்பை அதிகரிக்கக் கூடிய வகையிலான கல்விக் கொள்கை இங்கு இல்லை”, என்கிறார்.

“வேலை வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்ளும் வகையிலான தொழில்நுட்பப் பயிற்சிகள் இங்கு மிகவும் குறைவாகவே உள்ளன. வெளிநாடுகளில் பாடசாலைகளிலேயே துறைசார்ந்த கல்வியறிவு வழங்கப்படுகிறது”, எனவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் அதிகளவானோர் கலைத் துறையில் பட்டங்களைப் பெறுவதாகக் கூறும் பேராசிரியர் “அவ்வாறானவர்களுக்கு தொழிற்சந்தையில் வேலை வாய்ப்புகள் பெரும்பாலும் இல்லை” என்கிறார். இருந்தபோதிலும், கலைத்துறைப் பட்டதாரிகளை தொடர்ந்தும் அதிகளவில் அரசு உருவாக்கிக் கொண்டிருப்பதாகவும், இது பெரும் பிழை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.



**“முன்பே அரச ஊழியர் தொகை அதிகமாக இருந்தது”**

“1990களில் அரச ஊழியர்கள் சுயவிருப்பின் பேரில் - முன்கூட்டி ஓய்வு பெறும் திட்டமொன்றை அரசு முன்வைத்தது. இந்த திட்டத்தின் கீழ் பலர் ஓய்வுபெற்றனர். அந்தக் காலப் பகுதியிலேயே அரச ஊழியர்களின் தொகை அதிகமாக இருந்தமையாலேயே இந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனால், அடுத்து வந்த அரசாங்கங்கள் மீளவும் அரச துறையில் ஊழியர்களை அரசியல் ரீதியாக நியமித்தன.”

“அரசதுறைக்கு பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்குரிய நல்ல கொள்கையொன்று இலங்கையில் இல்லை. ஆட்சேர்ப்பின்போது அரசியல் செல்வாக்கு ஊடுருவுகிறது” எனவும் அவர் கூறினார்.

“அரசு இப்போது அரச பணியாளர்களை சம்பளமற்ற விடுமுறை பெற்று வெளிநாடுகளுக்குச் சென்று தொழில் வாய்ப்புகளைப் பெறுமாறு ஊக்குவிக்கிறது. ஆனால், இங்குள்ளவர்கள் நினைத்த மாத்திரத்தில் வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புகளைப் பெற முடியாது. எனவே, முதலில் வெளிநாடுகளுடன் தொழில் வாய்ப்புகளுக்கான ஒப்பந்தங்களை இலங்கை அரசு செய்துகொள்ள வேண்டும். அதனடிப்படையில் இங்குள்ள அரச ஊழியர்களை வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்பின் பொருட்டு அனுப்பி வைப்பதே சிறந்த நடவடிக்கையாக அமையும்” எனவும் அவர் கூறுகின்றார்.

**நாடு இன்னும் சீரழியும்**

மறுபுறமாக, “திறமை மிக்க ஊழியர்கள் தொழில் வாய்ப்புப் பெற்று வெளிநாடுகளுக்குச் சென்றுவிடும் போது, நாட்டில் திறமை மிக்க அரச ஊழியர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படும்” எனக் கூறும் அவர் இதனால் நாட்டின் பொருளாதாரத்தில் மேலும் வீழ்ச்சியேற்படும் நிலை உருவாகும் எனவும் எச்சரிக்கின்றார்.

எனவே மனித வள பயன்பாடு தொடர்பில் சரியானதொரு கொள்கையினை அரசு உருவாக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

“அண்மையில் (கோட்டாபய ராஜபக்ஷ காலத்தில்) 08ஆம் வகுப்பு வரை படித்தவர்களுக்கு ஒரு லட்சம் வேலைவாய்ப்பு வழங்கும் திட்டம் அமுல்படுத்தப்பட்டது. அரசியல் ரீதியாகவே இந்த வேலை வாய்ப்பு நியமனங்கள் வழங்கப்பட்டன. நாட்டில் என்ன அபிவிருத்தி ஏற்பட்டமையைக் கருத்திற் கொண்டு இந்த வேலைவாய்ப்பினை வழங்கினார்கள்?” என, இதன்போது பேராசிரியர் கேள்வியெழுப்பினார்.

“நாட்டு மக்களுக்கு தொழில்வாய்ப்புகளை வழங்க வேண்டிய தேவை அரசுக்கு உள்ளது. மக்களை பலவீனப்படுத்த முடியாது. எனவே, தொழில் வாய்ப்புகளைப் பெறுவதற்கான கல்வியையும் பயிற்சிகளையும் அரசு வழங்க வேண்டும். ஆனால் அதனை அரசு செய்யவில்லை. அரசியல் நோக்கங்களுக்காக உள்வாங்கப்பட்ட ஊழியர்கள்தான் அதிகமாக உள்ளனர்” என பேராசியர் ரஊப் குறிப்பிட்டார்.

**225 நாடாளுமன்ற உறுப்பினர்களில் வினைத்திறனுள்ளோர் எத்தனை பேர்?**

நாட்டிலுள்ள மொத்த அரச ஊழியர்களில் 10 லட்சம் பேர் வினைதிறனற்றவர்கள் என, அமைச்சர் ஹரீன் ரணசிங்க கூறியமையை இதன்போது நினைவுபடுத்திய பேராசிரியர் ரஊப் “நாடாளுமன்றத்திலுள்ள 225 உறுப்பினர்களில் எத்தனை பேர் வினைத்திறனுடையவர்கள் என்பதையும் அந்த அமைச்சர் கூற வேண்டும்” என்றார்.

இலங்கையில் கல்விக் கொள்கைக்கும் ஊழியர் படையணிக்கும் இடையில் தொடர்புகளில்லை என்பதையும், பொருளாதாரத்துறைகளுக்கும் ஊழியர் படைக்கும் இடையில் தொடர்புகள் இல்லை என்பதையும் பேராசிரியர் ரஊப் இந்த சந்திப்பின் போது தொடர்ச்சியாக வலியுறுத்தினார்.

“நாட்டுக்குத் தேவையான திறமைசாலிகள்தான் இப்போது வெளிநாடுகளுக்குச் சென்று கொண்டிருக்கின்றனர். வெளிநாட்டிலுள்ள தொழில் சந்தைக்குத் தேவையானவர்களை உருவாக்கி அனுப்புவதற்கு நாம் தவறி விட்டோம்” எனவும் அவர் குறிப்பிட்டார்.

“தொழில் பாதுகாப்பு, சமூக அந்தஸ்த்து ஆகியவற்றுக்காக சிலர் அரச தொழில்களை பெறுகின்றனர். ஆனால், முன்னர் தினக்கூலிகளாக மாதாந்தம் அவர்கள் பெற்ற வருமானத்தை விடவும் குறைந்தளவு சம்பளத்தையே தற்போது பெறுகின்றனர்” எனவும் தலைமைப் பேராசிரியர் ரஊப் சுட்டிக்காட்டினார். (பிபிசி)

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL

06) **பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக்கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக் குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

i) நான் ........................................ (ஆவணி, ஆவனி) மாதம் பிறந்தேன்.

ii) தேசியக்கொடியில் .................................... (வால், வாழ், வாள்) ஏந்திய சிங்கம் ஒன்று உண்டு.

ii) நாங்கள் .................................................... (சுற்றுலா, சுற்றுளா, சுற்றுழா) விற்காகக் கண்டிக்குச் சென்றோம்.

(3 புள்ளிகள்)

07) **பின்வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்க.**

i) ஆற்றிலே போட்டாலும் ........................................................................

ii) ...................................................... குறுகுறுக்கும். (2 புள்ளிகள்)

08) **கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.**

i) பலா கன்று போல பயிர் : ............................................................

ii) தென்னை ஓலை போல மூங்கில் : .................................................... (2 புள்ளிகள்)

09) **பின்வரும் வாக்கியத்திற்குரிய இரட்டைக்கிளவியை இட்டு பூரணப்படுத்துக.**

i) தம்பி தண்ணீரை ............................... (கட கட, மட மட) வெனக் குடித்தான்.

ii) காலையில் சூரியன் ................................. (தகதக, குளுகுளு) வென பிரகாசித்தது.

(2 புள்ளிகள்)

10) **தனிச்சொல்லை எழுதுக.**


i) வீண் செலவு செய்பவன் : ................................................................

ii) விமானத்தைச் செலுத்துபவன் : ..................................................... (2 புள்ளிகள்)

11) **கீழே தரப்பட்ட ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) Bread: ............................ ii) Cloud: ............................. (2 புள்ளிகள்)

12) **தரப்பட்ட ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலே எழுதுக.**

i)  .................................. ii)  ..................................

(2 புள்ளிகள்)

13) **பின்வரும் ஆங்கிலச் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்குக.**

i) do / like? / What / you : ..........................................................................

ii) old / How / you? / are : ......................................................................... (2 புள்ளிகள்)

14) **பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) ரோஹல : ............................................................

ii) தொளஹ : ....................................................... (02 புள்ளிகள்)

15) **பின்வரும் வாக்கியங்கள் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

i) சோறு சாப்பிடுங்கள் : ..................................................................................

ii) அங்கே பாருங்கள் : ................................................................................. (02 புள்ளிகள்)

❖ **விடை எழுதுக.**

16) | 7 | 8 |
| --- | --- |
| 3 | 0 |

இந்த நான்கு எண்ணட்டைகளாலும் உருவாக்கக்கூடிய மிகப் பெரிய எண்ணை எழுதுக.

.............................................................

17) ஏழாயிரத்து முந்நூற்று ஒன்பது என்ற எண்ணை நியம முறையில் இலக்கத்தில் எழுதுக.

..............................................................................

## விடைகள்

| | | | |
| --- | --- | --- | --- |
| **06.** | 1) ஆவணி | 2) வாள் | 3) சுற்றுலா |
| **07.** | 1) அளவறிந்து போடு | 2) குற்றமுள்ள நெஞ்சு | |
| **08.** | 1) நாற்று | 2) தாள் | |
| **09.** | 1) மடமட | 2) தக தக | |
| **10.** | 1) ஊதாரி | 2) விமானி / வலவன் | |
| **11.** | 1) பாண் | 2) முகில் | |
| **12.** | 1) Star | 2) Table | |
| **13.** | 1) What do you like? | 2) How old are you? | |
| **14.** | 1) வைத்தியசாலை | 2) பன்னிரண்டு | |
| **15.** | 1) பத் கன்ன | 2) எத்தன பலன்ன / எஹே பலன்ன /அத்தன பலன்ன | |
| **16.** | 8 730 | **17.** 7 309 | |

## கல்வி tv CHANNEL-1

**20.09.2022**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
| --- | --- | --- |
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

## கல்வி tv CHANNEL - 2

**20.09.2022**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
| --- | --- | --- |
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

## மாற்றுத்திறனாளி பெண்ணை காணவில்லை

மட்டக்களப்பு, செப். 20

ஒட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் மீராவோடை -04 ஹாஜியார் வீதியை சேர்ந்த மாற்றுத்திறனாளி பெண்ணை, கடந்த 08 நாட்களாக காணவில்லை என்று வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் குடும்பத்தினர் முறைப்பாடு செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாற்றுத்திறனாளியான ஏ.ஐ. பாத்திமா சம்ஹா என்ற இப் பெண் 23 வயதுடையவர் என்றும் இவர் கடந்த 10.09.2022 திகதி வீட்டில் இருந்து வைத்தியசாலைக்கு சென்றுள்ள நிலையில் இதுவரை வீடு திரும்பவில்லை என்றும் குடும்பத்தினர் தெரிவித்தனர்.

இவரை கண்டவர்கள் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தின் தொலைபேசி இலக்கமான 0652257709 என்ற இலக்கத்துக்கோ அல்லது அவரது குடும்பத்தாரின் இலக்கமான 0773727293 என்ற இலக்கத்துக்கோ தொடர்பை ஏற்படுத்துமாறு, பொதுமக்களின் உதவியை குடும்பத்தார் நாடி நிற்கின்றனர். (அ)

# கௌரவமான அரசியல் தீர்வு கோரி திருகோணமலையில் ஆர்ப்பாட்டம்!

திருமலை,செப்.20

**திருகோணமலை கடற்கரைக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**



வடக்கு-கிழக்கு மக்களுக்கான கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும் எனும் கோஷத்தை வலியுறுத்தி வடகிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த ஒருங்கிணைப்புக் குழுவின் 100 நாள் செயல் முனைவின் 50 ஆவது நாளை குறிக்கும் முகமாக இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது

திருகோணமலை கடற்கரைக்கு முன்பாக ஒன்று கூடிய பொதுமக்கள் கையில் பதாதைகள், பலூன்கள் மற்றும் பட்டங்களை ஏந்தியவாறு பேரணியாக சென்று குறித்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் யுத்த சூழ்நிலைக்கு பின்னரான அரசியல் தீர்வு வழங்கப்படவேண்டும், காணிப் பிரச்னைகளுக்கான நிரந்தர தீர்வு கிடைக்க பெற வேண்டும், கருத்து சுதந்திரம் வழங்கப்படவேண்டும், ஒன்று கூடுவதற்கான அனுமதி மறுக்கப்படக் கூடாது, பயங்கரவாத தடைச் சட்ட திட்டத்தில் கைது செய்யப்படுபவர்கள் விடுதலை செய்யப்படவேண்டும், மத சுதந்திரம் சிறுபான் மையினருக்கு கேள்விக்குறி யாக காணப்படுகிறது எனும் கோரிக்கைகள் பொறிக்கப்பட்ட பலூன்கள் மற்றும் பட்டங்கள் பறக்க விடப்பட்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். (அ)

# சம்மாந்துறை பத்திரகாளியம்மன் ஆலய பாற்குடப் பவனி நேற்று



அம்பாறை, செப். 20

வரலாற்று பிரசித்தி பெற்ற சம்மாந்துறை தமிழ் குறிச்சி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தின் வருடாந்த அலங்கார உற்சவத்திற்கான பாற்குட பவனி, நேற்று திங்கட்கிழமை ஆலய பரிபாலன சபை தலைவர் சீனித்தம்பி சுப்பிரமணியம் தலைமையில் சிறப்பாக நடை பெற்றது.

நேற்று கோரக்கர் பிள்ளை யார் ஆலயத்தில் இருந்து பாற் குடபவனி பிரதான வீதி வழியாக பத்திரகாளி அம்மன் ஆலயத்தை சென்றடைந்தது.

ஆலயத்தின் வருடாந்த உற்சவம் மற்றும் தீமிதிப்பு வைபவம் கடந்த17 ஆம் திகதி சனிக்கிழமை கதவு திறத்தலுடன் ஆரம்பமாகியது.

தொடர்ச்சியாக 10 நாட்கள் திருவிழாக்கள் இடம் பெற்று 26 ஆம் திகதி திங்கட்கிழமை தீமிதிப்பு வைபவத்துடன் நிறைவடைகிறது.

தினமும் நண்பகல் 12 மணிக்கு மதிய பூசை யும் மாலை 6 மணிக்கு இரவு பூசையும் இடம் பெறும் என ஆலய பரிபாலன சபைத் தலைவர் சீனித்தம்பி சுப்பிரமணியம் தெரிவித்தார்.

ஆலய பிரதம பூசகர் குமாரகுல சிங்கம் லோகேஷ் தலைமையில் சடங்குகள் இடம் பெற்றன.

நேற்று திங்கட்கிழமை ஸ்ரீ கோரக்கர் பிள்ளையார் ஆலயத்திலிருந்து பால்குட பவனி இடம்பெற்றது.

23ஆம் திகதி வெள்ளிக்கிழமை வீரகம்பம் வெட்டல் அதனை தொடர்ந்து 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நோன்புக் கட்டல் சடங்கு இடம் பெறும்.

26 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6 மணிக்கு ஆராதனையும் தீமிதிப்பு வைபவமும் இடம்பெற இருப்பதாக ஆலய பரிபாலன சபை தலைவர் சீனித் தம்பி சுப்பிரமணியம் மேலும் கூறினார். (அ)

# சிறுவர், பெண்கள் அபிவிருத்தி; அம்பாறையில் கலந்துரையாடல்

அம்பாறை, செப். 20

காரைதீவு பிரதேச செயலகத்தின் சிறுவர் மற்றும் பெண்கள் அபிவிருத்திக் குழுக்கூட்டம் பிரதேச செயலாளரின் ஆலோசனைக்கமைய உதவிப் பிரதேச செயலாளர் எஸ்.பார்த்தீபன் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது சிறுவர் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், சிறுவர்களின் எதிர்கால அபிவிருத்தி தொடர்பாகவும், சிறுவர் பெண்களோடு சேவை யாற்றுபவர்களை ஒருங்கிணைப்பதன் மூலம் அவர்களால் முன்வைக்கப்படுகின்ற வேலைகள், எதிர்கால திட்டங்கள் தொடர் பாகவும் கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக எதிர்வரும் முதலாம் திகதி கொண்டாடப்படவிருக்கும் சர்வ தேச சிறுவர்தின நிகழ்வு தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. இக்கூட்டத்தினை சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் டீ.ஜாசுகி ஏற்பாடு செய்திருந்தார்.

இக்கூட்டத்தில் காரைதீவு பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர், காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி தஸ்லீமா வஸீர், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம் எம் அச்சி முகமட், காரைதீவு இலங்கை வங்கி மற்றும் ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர்கள், சிறுவர் நன்னடத்தை திணைக்கள உத்தியோகத்தர், கோட்டக்கல்வி அலுவலக உத்தியோகத்தர், முன்பள்ளி ஆசிரியர் சங்க ஆசிரியர், தொழிற்பயிற்சி அதிகார சபை உத்தியோகத்தர், காரைதீவு பிரதேச செயலக சமூக சேவைப்பிரிவு உத்தியோகத்தர், வெளிநாட்டு வேலை வாய்ப்பு பிரிவு உத்தியோகத்தர், கிராம சேவை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பாடசாலை ஆசிரியர் சிறுவர் பெண்கள் பிரிவு உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர். (அ)

# பாண்டிருப்பு ஸ்ரீ திரௌபதை ஆலயத்தின் வருடாந்த மஹா மகோற்சவம் ஆரம்பம்

அம்பாறை, செப். 20

வரலாற்று பிரசித்தி பெற்ற கல்முனை ,பாண்டிருப்பு ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலய வருடாந்த மஹா மகோற்சவப் பெருவிழா இன்று செவ்வாய்க்கிழமை திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமாகிறது.

இன்று செவ்வாய்க்கிழமை மாலை திருக்கதவு திறத்தலும்,கடலுக்குச் சென்று ஆராதனை செய்து ஊர் ஆராவாரம் பண்ணி ஊர்வலம் வருதலுடன், ஆராதனையுடன் கொடியேற்றலும் இடம்பெறும்.

எதிர்வரும் 26ஆம் திகதி திங்கட்கிழமை இரவு சுவாமி எழுந்தருளப்பண்ணல் இடம் பெறும். மறுநாள் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை நாட்கள் வெட்டுதல். அதேவேளை, ஒக்ரோபர் 01ஆம் திகதி சனிக்கிழமை மாலை கல்யாணக்கால் வெட்டுதலும்,ஊர்வலமும் இடம்பெறும்.

05ஆம் திகதி புதன்கிழமை வாள் மாற்றுதலும்,பரந்தாமன் பஞ்சபாண்டவர் ஸ்ரீ திரௌபதா தேவி சகிதம் வனவாசம் செல்லுதலும்,அதைத்தொடர்ந்து அஞ்ஞாத வாசம் செய்தலும் இடம் பெறும்.

06 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு அருச்சுனர் பாசுபதம் பெறத்தவம் செய்தலும்,அரவானைக் களப்பலியிடலும் இடம்பெறும்.

07ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை வீரகும்பம் நிறுத்தலும்,தீ மூட்டுதலும்.பிற்பகல் கடல் குளித்தலும், மஞ்சள் குளித்தலும், அதனைத் தொடர்ந்து தீ மிதித்தல் வைபவம் நடைபெறும்.

மறுநாள் 8 ஆம் திகதி சனிக்கிழமை பகல் பாற்பள்ளயமும், தருமர் முடிசூட்டு வைபவமும்,வாழிபாடுதலும். இரவு அம்மனின் ஊர்வலத்துடன் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தை வந்தடைதலும் இடம் பெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (அ)

### இது போருக்கான காலம் அல்ல!

## ரஷ்ய ஜனாதிபதி புடினுக்கு அறிவுறுத்திய பிரதமர் மோடி



புதுடில்லி, செப்.20

இது போருக்கான காலம் அல்ல என்று ரஷ்ய ஜனாதிபதி புடினிடம், இந்தியப் பிரதமர் மோடி நேருக்கு நேராகக் கூறியது உலகம் முழுவதும் ஊடகங்களில் மிகப் பெரிய அளவில் வரவேற்பைப் பெற்றுள்ளது.

அதற்கு சில மணி நேரம் முன்பு இந்தியா ரஷ்யாவுக்கு மேலும் ஒரு எதிர்வினை ஆற்றி உள்ளது. உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி காணொளி வாயிலாக ஐநா. பொதுக்கூட்டத்தில் உரை நிகழ்த்துவதற்கு ஆதரவாக இந்தியா வாக்களித்துள்ளது.

கடந்த ஏழு மாதங்களாக ரஷ்யா-உக்ரைன் இடையே போர் நீடிக்கும் நிலையில் இந்தியா அமெரிக்கா-ரஷ்யா இடையே வெடித்த மோதலில் சார்பு எடுக்காமல் நடுநிலைக் கொள்கையில் உறுதியுடன் உள்ளது.

ரஷ்யாவை விமர்சிப்பதிலும் இந்தியா மிகுந்த கவனத்துடன் செயல்பட்டு வருகிறது. (அ)

## சீனாவில் பஸ் கவிழ்ந்து 27 பேர் உயிரிழந்தனர்!



பீஜிங், செப்.20

தென்மேற்கு சீனாவின் மலைப்பகுதியான குய்சோவ் மாகாணத்தில் நெடுஞ்சாலையில் பயணிகளை ஏற்றிச் சென்ற பஸ் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 27 பேர் உயிரிழந்தனர். மேலும் 20 பேர் படுகாயமடைந்தனர் என குய்சோவ் மாகாண பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாகாண தலைநகரான குயாங்கிற்கு தென்கிழக்கே 170 கி.மீ . தொலைவில் உள்ள சாண்டு பகுதியில் இந்த விபத்து நடந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் சிக்கிய பஸ்ஸில் 47 பேர் பயணித்தனர். காயமடைந்த 20 பேர் மீட்கப்பட்டு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர். (அ)

# அமெரிக்காவில் கொரோனா முற்றாக முடிவுக்கு வருகிறது

### கூறுகிறார் ஜனாதிபதி ஜோ பைடன்

நியூயோர்க், செப்..20

**அமெரிக்காவில் கொரோனா தொற்று நோய் முடிவுக்கு வருவதாகத்தான் நம்புவதாக ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.**



எனினும் 1 மில்லியனுக்கும் அதிகமான அமெரிக்கர்களை கொன்ற தொற்று நோயால் ஏற்பட்ட நெருக்கடிகளை அமெரிக்கா தொடர்ந்தும் எதிர்கொண்டு வருவதாக அவர் ஒப்புக்கொண்டார்.

உலக சுகாதார அமைப்பால் பிரகடனப்படுத்தப்பட்ட கொவிட் சர்வதேச பொது சுகாதார அவசரநிலை இன்னமும் அமுலில் உள்ளது. அமெரிக்காவிலும் கொவிட் பொது சுகாதார அவசர நிலை தொடர்கிறது. எனினும் சர்வதேச சுகாதார துறைசார் வல்லுனர்கள் கொவிட் முடிவுக்கு வருவது குறித்த நம்பிக்கைகளை வெளிப்படுத்தியுள்ள நிலையிலேயே பைடனின் இவ்வாறான கருத்து அமைந்துள்ளது.

உலகம் கோவிட் -19 தொற்று நோயை வெல்லும் இலக்கை நெருங்கி வருவதாக கடந்த வாரம் கருத்து வெளியிட்ட உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ், வைரஸைக் கட்டுப்படுத்த தொடர்ந்து பணியாற்றுமாறு நாடுகளை வலியுறுத்தினார்.

கொரோனாவின் முடிவுக்கான அறிகுறிகள் தென்படுகின்றன. ஆனால் இன்னும் அதற்காக போராட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, அமெரிக்காவில் கொவிட் தொற்றுநோய் நெருக்கடி முடிவுக்கு வருவதா கத் தான் நம்புதாக ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளபோதும் கடந்த இரண்டு வாரங்களில் அமெரிக்காவில் தினசரி சுமார் 65,000 புதிய கொவிட் தொற்றாளர்கள் பதிவாகியுள்ளதாக ஜோன்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் தரவு காட்டுகிறது. எனினும் தொற்றாளர் தொகை அனைத்து மாநிலங்களிலும் தொடர்ந்து குறைந்து வருகின்றது.

இதேவேளை, அமெரிக்கா முழுவதும், கொவிட்-19 நோயால் தினமும் சுமார் 400 பேர் இறக்கின்றனர் எனவும் ஜோன்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழக தரவு கூறுகின்றது. (அ)

## மகாராணி 2 ஆம் எலிசபெத்தின் இறுதி நிகழ்வுக்கு அழைப்பில்லை

### ரஷ்யா கடும் கண்டனம்

மொஸ்கோ, செப்.20

மகாராணி 2ஆம் எலிசபெத்தின் இறுதி நிகழ்வுக்கு ரஷ்ய இராஜதந்திரிகர்கள் எவருக்கும், பிரித்தானியா அழைப்பு விடுக்காமைக்கு ரஷ்யா தனது கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.



உலகளாவிய ரீதியாக எலிசபெத் மகாராணியின் மறைவிற்கு தமது உளபூர்வமான இரங்கலை வெளியிடும் இந்த தருணத்தில் ரஷ்யா முற்று முழுதாக ஓரங்கட்டப்பட்டமை கண்டனத்திற்கு உரிய விடயம் என ரஷ்ய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியா ரஷ்யாவை முற்றாக நிராகரிப்பதற்கு முன்னர், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடின், பிரித்தானிய மகாராணியாரின் இறுதி நிகழ்வில் தாம் கலந்து கொள்ள போவதில்லை என தெரிவித்திருந்தார்.

உக்ரைனுக்கு எதிராக ரஷ்யா ஆக்கிரமிப்பு யுத்தத்தை ஆரம்பித்ததன் பின்னர், பிரித்தானியா மற்றும் ரஷ்யாவிற்கு இடையேயான இராஜதந்திர உறவுகள் முற்றாக துண்டிக்கப்பட்டன.

ரஷ்யா போன்று சிரியா, வெனிசுலா, ஆப்கானிஸ்தான், பெலாரஸ் மற்றும் மியன்மார் ஆகிய நாடுகளின் இராஜதந்திரிகர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருக்கவில்லை. (அ)

## சர்வதேச விண்வெளி நிலையத்தில் இரண்டு சீன வீரர்கள் நடை பயணம்

பிஜிங், செப்.20

விண்வெளியில் சீனா தனியாக அமைத்து வரும் ‘தியாங்கொங்“ சர்வதேச விண்வெளி நிலையத்தில் சீன விண்வெளி வீரர்கள் நடைபயணம் மேற்கொண்டு விண்வெளி நிலைய இறுதிக்கட்ட பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.


விண்வெளியில் நடப்பதற்கான பிரத்யேக ஆடைகளை அணிந்து கொண்டு விண்வெளி நிலையத்தில் இருந்து சனிக்கிழமை வெளியே வந்த ஷென் டாங் , கை சுஹி ஆகிய 2 விண்வெளி வீரர்களும் விண்வெளி நிலையத்தின் வெளிப்புறம் இருக்கும் பிரமாண்டமான இயந்திரத்தில் பொருத்த வேண்டிய உபகரணங்களை பொருத்தியதாக சீன விண்வெளி நிறுவனம் தெரிவித்துள்ளது.

சீனா விண்வெளியில் தியாங்கொங் என்ற பெயரில் தனக்கென புதிதாக ஒரு விண்வெளி நிலையத்தை கட்டமைத்து வருகிறது. இந்த ஆண்டு இறுதிக்குள் இந்த விண்வெளி நிலையத்தை பயன்பாட்டுக்கு கொண்டுவர சீனா திட்டமிட்டுள்ளது.

அதன்படி ஷென் டாங், கை சுஹி ஆகிய 2 விண்வெளி வீரர்களும் லியு யாங் என்ற வீராங்க னையும் கடந்த 5 மாதங்களாக விண்வெளியில் தங்கியிருந்து புதிய விண்வெளி நிலையத்தை அமைக் கும் இறுதி கட்ட பணிகளை மேற்கொண்டு வரு கின்றனர்.

இந்த நிலையில் விண்வெளி நிலையத்தை செயற்பாட்டுக்கு கொண்டு வரும் பணியின் ஒரு பகுதியாகவே சீன விண்வெளி வீரர்கள் ஷென் டாங் மற்றும் கை சுஹி ஆகிய இருவரும் நடைபயணம் மேற்கொண்டனர்.

இதேவேளை, ரஷ்யாவால் உருவாக்கப்பட்டு, பல நாடுகளின் கூட்டு முயற்சியில் செயல்பட்டு வரும் தற்போதைய உலகின் ஒரே விண்வெளி ஆய்வகமாக சர்வதேச விண்வெளி நிலையம் உள்ளது. இந்நிலையில் சீனாவின் தியாங்கொங் விண்வெளி



நிலையம் செயற்படத் தொடங்கினால் தனக்கென்று சொந்தமாக விண்வெளி நிலையத்தை வைத்திருக்கும் ஒரே நாடு என்ற பெருமையை சீனா பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)



# டெஸ்ட் போட்டியிலிருந்து ருபல் ஹுசைன் ஓய்வு!

டாக்கா, செப். 20

டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக பிரபல பங்களாதேஷ் அணியின் வேகப்பந்து வீச்சாளர் ருபல் ஹுசைன் அறிவித்துள்ளார்.

32 வயதான ருபல் ஹுசைன், பங்களாதேஷ் அணிக் காக 2009 முதல் 27 டெஸ்ட்கள், 104 ஒருநாள், 28 இருபது - 20 போட்டிகளில் விளையாடியுள்ளார். 2020 பெப்ரவரிக்குப் பிறகு டெஸ்ட் கிரிக்கெட்டில் அவர் விளையாடவில்லை.

கடந்த ஏப்ரல் மாதத்துக்குப் பிறகு அவர் வங்கதேச அணியில் இடம்பெறவில்லை. 2021 இருபது - 20 உலகக் கிண்ண அணியில் ருபல் ஹுசைன் இடம் பெற்றிருந்தாலும் விளையாட வாய்ப்பு கிடைக்க வில்லை.

இந்நிலையில் டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக ருபல் ஹுசைன் நேற்று அறிவித்தார். இளம் வீரர்களுக்கு அதிக வாய்ப்புகள் அளிக்கப்பட் டால் பங்களாதேஷ் பலமுள்ள அணியாக மாறும் என அவர் கூறியுள்ளார். 27 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள ருபல் ஹுசைன் 36 விக்கெட்டு களும் 265 ஓட்டங்களும் எடுத்துள்ளார்.

# மூன்று பிரபல வீரர்களை வீழ்த்தினார் பிரக்ஞானந்தா



சென்னை, செப். 20

ஜூலியஸ் பெயார் கிண்ண சதுரங்க போட்டியில் முதல் நாளில் மூன்று வலுவான வீரர்களைத் தோற் கடித்துள்ளார் தமிழகத்தைச் சேர்ந்த பிரக்ஞானந்தா.

மெல்ட்வாட்டர் சம்பியன்ஸ் சதுரங்க தொடரின் 2022 பருவத்தின் 5ஆவது போட்டியாக ஜூலியஸ் பெயார் கிண்ண சதுரங்கப் போட்டி நேற்றுமுன்தினம் தொடங்கியது. இப்போட்டியில் கார்ல்சன், பிரக் ஞானந்தா, அர்ஜூன் எரிகைசி உள்பட 16 வீரர்கள் பங்கேற்கிறார்கள். இணையம் வழியாக செப்ரெம்பர் 25 வரை இப்போட்டி நடைபெறும். ஒவ்வொரு வீரரும் தலா 15 போட்டிகளில் விளையாட வேண்டும். 16 வீரர்களிலிருந்து 8 பேர் நொக் அவுட் சுற்றுக்குத் தகுதி பெறுவார்கள்.

முதல் நாளன்று இந்தியாவின் பிரக்ஞானந்தா - இவான்சுக், டுடா, ஜெல்பண்ட் என மூன்று பிரபல வீரர்களை வீழ்த்தினார். எனினும் கடைசிப் போட்டி யில் கிறிஸ்டோபர் யூவிடம் தோற்றார்.

முதல் நாள் முடிவில் கார்ல்சன் 10 புள்ளிகளுடன் முதல் இடத்திலும் பிரக்ஞானந்தா, இவான்சுக், ஹான்ஸ் நீமன், அர்ஜூன் எரிகைசி ஆகியோர் தலா 9 புள்ளிகளுடன் 2ஆம் இடத்திலும் உள்ளார்கள். (ஐ)

# சென்னை ஓப்பன் ரென்னிஸ் சம்பியன் வென்றார் லிண்டா!

சென்னை, செப். 20

சென்னை ஓப்பன் மகளிர் ரென்னிஸ் போட்டியின் ஒற்றையர் பிரிவில் செக். குடியரசு வீராங் கனை லிண்டா ப்ருஹ்விர்டோவா சம்பியன் பட்டம் வென்றார்.

சென்னை - நுங்கம்பாக்கத்தில் நடந்த இறுதிப் போட்டியில், போலந்து வீராங்கனை மக்டாலி னெட்டும், செக். குடியரசு வீராங்கனை லிண்டா ஃப்ருஹ்விர் டோவாவும் மோதினர். இதில் லிண்டா ஃப்ருஹ்விரடோவா 4-6, 6-3, 6-4 என்ற செற் கணக்கில் மக்டா லினெட்டை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை வென்றார்.

இதேசமயம், இரட்டையர் பிரிவு இறுதிப் போட்டியில் கனடாவின் கேப்ரியேலா டப்ரோவ்ஸ்கி - பிரேசிலின் லூ யிசா ஸ்டெபானி ஜோடி 6-1, 6-2 என்ற நேர் செற் கணக்கில் ரஷ்யா வின் அன்னா லின்கோவா - ஜார்ஜி யாவின் நடிலா ஜலாமிட்ஸ் ஜோடியை வீழ்த்தி கிண்ணத்தைக்




கைப்பற்றியது.

போட்டியின் மொத்தப் பரிசுத் தொகை 2 கோடி இந்திய ரூபாயா கும் (நம் நாட்டு மதிப்பில் சுமா ராக 9 கோடி ரூபாய்). இதில், ஒற் றையர் பிரிவில் பட்டம் வென்ற லிண்டாவுக்கு 26.50 இலட்சம இந்திய ரூபாயும், 2-வது இடம் பிடித்த மக்டா லினெட்டுக்கு சுமார் ரூ.15.77 இலட்சம் இந்திய ரூபாயும் வழங்கப்பட்டது.

(ஐ)

# புதிய சாதனைக்கு தயாராகிறார் கோலி!

புதுடில்லி, செப். 20

சர்வதேச கிரிக்கெட்டில் இந்திய வீரர் விராட் கோலி, இன்னும் 207 ஓட்டங்கள் எடுத்தால் புதிய சாதனை படைப்பார்.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலை வரும் நட்சத்திர துடுப்பாட்ட வீரருமான விராட் கோலி இதுவரை 468 சர்வதேச போட்டிகளில் விளை யாடி 24,002 ஓட்டங்கள் குவித்துள்ளார். இதில், 71 சதங்களும், 124 அரைச் சதங்களும் அடங்கும்.

இந்திய அணிக்காக அதிக ஓட்டங்கள் குவித்த வீரர் களின் பட்டியலில் தற்போது மூன்றாவது இடத்தில் உள்ளார் கோலி. முதல் இடத்தில் 34,357 ஓட்டங்களு டன் சச்சின் டெண்டுல்கரும், இரண்டாவது இடத்தில் 24,208 ஓட்டங்களுடன் ராகுல் டிராவிட்டும் உள்ளனர்.

இந்நிலையில், இன்று தொடங்கவிருக்கும் அவுஸ்தி ரேலிய அணிக்கு எதிரான இருபது - 20 தொடரில், கோலி தனது அதிரடியை தொடரும் பட்சத்தில் 207 ஓட்டங்களை எளிதாக கடந்து இரண் டாவது இடத்துக்கு முன்னேறிவிடுவார் என எதிர் பார்க்கப் படுகிறது.

இதுமட்டுமின்றி சர்வதேச அரங்கில் அதிக ஓட்டங்கள் குவித்த வீரர்களின் பட்டியலிலும் டிரா விட்டை பின்னுக்கு தள்ளி 6ஆவது இடத்துக்கு முன்னேறிவிடுவார்.

இதேவேளை, சர்வதேச அரங்கில் அதிக ஓட்டங் கள் எடுத்த வீரர்களின் வரிசையில், சச்சின் 34,357 ஓட்டங் களுடன் முதலிடத்திலும், இலங்கையின் குமார் சங்ககார 28,016 இரண்டாவது இடத்திலும், அவுஸ்தி ரேலியாவின் றிக்கி பொண்டிங் 27,483 ஓட்டங்களு டன் மூன்றாவது இடத்திலும், இலங்கை யின் மஹேல ஜெயவர்த்தன 25,957 ஓட்டங்கள், தென்னாபிரிக்கா வின் ஜக் கலிஸ் 25,534 ஓட்டங்களு டன் முறையே 4, 5ஆவது இடங்களில் உள்ளனர். (ஐ)







# ஆஸியுடனான போட்டி; முஹமது ஷமி நீக்கம்!

புதுடில்லி, செப். 20

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக அவுஸ்தி ரேலியாவுடன் இன்று ஆரம்பமாகும் இருபது - 20 கிரிக்கெட் தொடரிலிருந்து இந்திய அணி வீரர் முஹ மது ஷமி விலகியுள்ளார்.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் செய்து 3 சர்வதேச இருபது - 20 கிரிக்கெட் போட்டிகளில் விளையாட உள்ளது. இந்தத் தொடரின் முதல் போட்டி செப்ரெம்பர் 20ஆம் திகதி மொஹாலியில் நடைபெறவுள்ளது.

இந்நிலையில், இந்திய வேகப்பந்து வீச்சாளர் முஹமது ஷமிக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டி20 தொடரில் முஹமது ஷமி விளையாட மாட்டார் என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை தெரிவித்துள்ளது.

ஷமிக்கு பதிலாக உமேஷ் யாதவ் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தத் தொடரில், ஷமியின் விலகல் இந்திய அணிக்கு பின்னடைவாக இருக்கும் என்று விமர்சகர் கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# தேர்தல் முறையை மாற்ற அரசாங்கம் தீவிர முயற்சி!

## மீளாய்வு செய்யவேண்டும் என்கிறார் ஹக்கீம்

அம்பாறை,செப்.20

**தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முஸ்தீபுகளை மேற்கொண்டு வருகின்றது. இதனை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீளாய்வு செய்யவேண்டுமென, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.**



உள்ளூர் மேம்படுத்தல் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், சுமார் 02 கோடி ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட ஒலுவில் புதிய பொது நூலக கட்டடம் கடந்த 17ஆம் திகதி வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் நல்லொரு சுழல் ஏற்பட்டிருக்கின்றது. இனி ஒருபோதும் நாட்டில் இனவாதம் தலை தூக்கமாட்டாது என நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் மூன்று சமூகங்களும் ஒற்றுமையாக வாழந்து வரும் காலகட்டத்தில் சில இனவாதிகள் இன முறுகல்களை ஏற்படுத்துவதற்கு எத்தனித்து வருகின்றார்கள். இதனை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் முறியடித்து, சுமூகமான நிலையை ஏற்படுத்தி வருகின்றது.

ஒலுவில் துறைமுக நிர்மாணிப்பினால் ஏற்பட்டுள்ள பிரச்னைகளுக்குத் தீர்வு காணுமாறு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

ஒலுவில் துறைமுகத்தை துறைமுக அதிகார சபையினர் மீன்பிடித் துறைமுகமாக மாற்றி, மீன்பிடித் துறைமுக திணைக்களத்துக்கு ஒப்படைத்துள்ளனர். இதில் தனியாருக்கு தொழிற்சாலை அமைப்பதற்கு இடம் வழங்கப்பட்டுள்ளது. இதனை மீளாய்வு செய்யவேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளோம்-என்றார். (அ)

# உயர்தர மாணவர்களுக்கு ‘சிப்தொர’ புலமை பரிசில்

மட்டக்களப்பு, செப். 20

சமுர்த்தி அபிவிருத்தி திணைக் களத்தின் கீழுள்ள சமுர்த்தி சமூ கப்பாதுகாப்பு நிதியத்தின் மூலம் ஓட்ட மாவடி பிரதேச செயலக பிரிவில் உயர்தர மாணவர்களுக்கு சமுர்த்தி சிப்தொர புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

ஓட்டமாவடி பிரதேச செயலக சமுர்த்தி திணைக்களத்தின் தலைமை முகாமையாளர் எம்.ஐ.ஏ.அஸீஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதேச செயலாளர் வீ.தவராஜா பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் செயலக உதவிப் பிரதேச செயலாளர் எஸ்.எம்.அல் அமீன், பிரதித் திட்டமிடல் பணிப் பாளர் எஸ்.ஏ.றியாஸ், கணக்காளர் அஹமட் சஜ்ஜாத், சமுர்த்தி அபிவி ருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

ஓட்டமாவடி பிரதேச செயலக பிரி வில் சமுர்த்தி உதவி பெறும் பயனா ளிகளின் குடும்பங்களில் உயர்தரக் கல்வியைத் தொடர்கின்ற 156 மாண வர்களின் கல்வி ஊக்குவிப்புக்காக மாதாந்தம் ஆயிரத்தி ஐநூறு ரூபா வீதம் இரண்டு வருடங்களுக்கு சமுர்த்தி சிப்தொர புலமைப் பரிசில் நிதி உதவி வழங்கப்படுகின்றது. (அ)

# ஏறாவூர் இ.போ.ச. டிப்போவினால் தூர இடங்களுக்கான பஸ் சேவை

மட்டக்களப்பு, செப். 20

மட்டக்களப்பு பிரதேசத்தில் இருந்து கொழும்பு செல்கின்ற பயணிகளின் நீண்ட கால கோரிக்கையை யடுத்து, இலங்கை போக்குவரத்து சபையின் ஏறாவூர் பஸ் டிப்போவினால் புதிய பஸ் சேவையொன்று அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக டிப்போ முகாமையாளர் மொஹமட் ஸெய்னி தெரிவித்தார்.

மேற்படி இ.போ.ச பஸ் தினமும் காத்தான்குடியில் இருந்து இரவு 10 மணிக்கு கொழும்பை நோக்கி புறப்படுகின்றது. அதே பஸ் மறுநாள் இரவு 7 மணிக்கு கொழும்பு பிரதான பஸ் நிலையத்தில் இருந்து புறப்பட்டு கல்முனை வரை செல்கின்றது. இந்த இரவு நேர பஸ் சேவையினால் மிகுந்த நன்மையடைவதாக பயணிகள் பலர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இ.போ.சவின் ஏறாவூர் டிப்போவினால் தூர இடங்களுக்கான மேலும் பல பஸ் சேவைகள் நடத்தப்பட்டு வருவதாக முகாமையாளர் மொஹமட் ஸெய்னி தெரிவித்தார்.

ஏறாவூரில் இருந்து தினமும் அதிகாலை 5.15 மணிக்கு கொழும்புக்கான சேவை நடத்தப்படுகின்றது. அந்த பஸ் இரவு 11 மணிக்கு கொழும்பு பஸ்நிலையத்திலிருந்து காத்தான்குடிக்குப் புறப்படுகின்றது.

ஏறாவூரில் இருந்து அதிகாலை 4.15 மணிக்கு வவுனியாவுக்கான பஸ் சேவை நடத்தப்படுகின்றது. வவுனியாவில் இருந்து காலை 11 மணிக்கு கல்முனை வரையான சேவை நடைபெறுகின்றது.

ஏறாவூரில் இருந்து தினமும் காலை 6.15 மணிக்கு புத்தளத்துக்கான சேவை நடைபெறுகின்றது. அந்த பஸ் மறுநாள் காலை 7 மணிக்கு புத்தளத்திலிருந்து புறப்படும்.

காத்தான்குடியிலிருந்து காலை 7 மணிக்கு கட்டுநாயக்கவுக்கான பஸ் சேவை நடைபெறுகிறது. கட்டுநாயக்கவிலிருந்து காலை 8 மணிக்கு கல்முனை நோக்கி அந்த பஸ் புறப்படுகிறது. அதேவேளை கல்முனையில் இருந்து காலை 9 மணிக்கு கட்டுநாயக்கவுக்கான பஸ் சேவையையும் ஏறாவூர் டிப்போ நடத்துகின்றது.

ஆசனப்பதிவுகளை ஒன்லைன் ஊடாக மேற்கொள்ள முடியுமெனவும் முகாமையாளர் தெரிவித்தார். (அ)

# பொத்துவில் கனகர் கிராம மக்கள் 32 ஆண்டுகளாக அகதி வாழ்க்கை

## ஜெனிவாவில் கூறினார் கல்முனை கணேஷ்

அம்பாறை, செப். 20

“இலங்கையின் கிழக்குப் பகுதியில் உள்ள அம்பாறை மாவட்டத்திலே பொத்துவில் பிரதேச நிர்வாக எல்லைக்குட்பட்ட கனகர் கிராமம் எனும் கிராமத்து மக்கள் கடந்த 1990 ஆம் ஆண்டு அக்கிராமத்தில் இருந்து வேறு கிராமங்களுக்கு தஞ்சம் புகுந்தனர். ஆனால் அன்றிலிருந்து இன்றுவரை தங்களது சொந்த இருப்பிடம் செல்வதற்காக தொடர்ந்து 32 ஆண்டுகளாக போராடியும் இன்னும் பலனளிக்கவில்லை .இது அப்பட்டமான மனித உரிமை மீறல்.”

-இவ்வாறு ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் சபை பிரதான மாநாட்டு மண்டபத்தில் உரையாற்றிய மாணவர் மீட்பு பேரவை தலைவரும், மனித உரிமை செயற்பாட்டாளருமான பொறியியலாளர் கலாநிதி செல்வராசா கணேஷ் தெரிவித்தார்.

191 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட கூட்டத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

புத்தர் சிலைகளை நட்டு தமிழர்களின் நிலங்களை அபகரிப்பு செய்கின்றனர். அத்தோடு நான் வாழ்கின்ற இலங்கையின் கிழக்குப் பகுதியில் உள்ள மாவட்டமாகிய அம்பாறை மாவட்டத்திலே பொத்துவில் பிரதேச நிர்வாக எல்லைக்குட்பட்ட கனகர் கிராமம் எனும் கிராமத்து மக்கள் இலங்கை இராணுவத்தின் கெடுபிடி காரணமாக கடந்த 1990 ஆம் ஆண்டு அக்கிராமத்தில் இருந்து வேறு கிராமங்களுக்கு தஞ்சம் புகுத்தனர். ஆனால் அன்றிலிருந்து இன்றுவரை தங்களது சொந்த இருப்பிடம் செல்வதற்காக தொடர்ந்தும் 32 ஆண்டுகளாக போராடி வருகின்றனர். இலங்கை அரசோ தொடர்ந்தும் அவர்களின் அடிப்படை உரிமையை வழங்காது தடுத்து வருகின்றனர். இதில் ஏறத்தாழ 700 ஏக்கருக்கும் மேற்பட்ட 300 குடும்பங்கள் பாதிக்கப்பட்டு தாங்களின் வாழ்வாதாரம், பிள்ளைகளின் கல்வி, போன்றவற்றை பெற்றுக் கொள்ள மிகவும் சிரமப்பட்டுக்கொண்டிருக்கின்றனர்.

அத்தோடு இலங்கையின் கிழக்கேயுள்ள மட்டக்களப்பு எனும் மாவட்டத்தில் உள்ள செங்கலடி பிரதேச செயலக எல்லைக்குப்பட்ட மயிலத்தமடு மாதவனை எனும் பிரதேசத்தில் தமிழ் மக்களால் தங்களது வாழ்வாதாரத்திற்கு என பயன்படுத்தப்படும் மேய்ச்சல் தரையினையை சிங்கள குடியேற்றம் செய்து வருகின்றனர். இதன் நிமித்தம் 400,000 க்கும் மேற்பட்ட கால்நடைகள் பாதிக்கப்பட்டுள்ளன. அத்தோடு இதே பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட கிராமத்தில் 1600 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலத்தை இராணுவம் அபகரித்துள்ளது.

அத்தோடு வெல்லாவெளி எனும் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட கெவுளியாமடு எனும் கிராமத்தில் உள்ள 500 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலத்தை இலங்கை அரசு அபகரித்துள்ளது. எனவே இனப் படுகொலையின் அங்கங்களாகவுள்ள இவ் பௌதீக வளங்கள் அபகரிப்பானது தொடர்ந்து செல்கின்றது எனவே மிக மோசமான இன அழிப்பை தமிழர்கள் மேல் இலங்கை அரசு மேற்கொண்டு வருகின்றது.

வலுக்கட்டாயமாக நிலம் கையகப்படுத்துவது குறித்து விசாரிக்க சிறப்பு




அறிக்கையாளரை நியமிக்குமாறு ஐ.நா.வை வலியுறுத்துகிறோம். தமிழர்களுக்கு எதிராக குற்றங்களை இழைத்த போர்க்குற்றவாளிகளை அடையாளம் காண ஐ.நா.வை வலியுறுத்துகிறோம். அவர்கள் மீது ஐ.சி.சி. நடவடிக்கை எடுப்பதற்கு பரிந்துரை செய்யவும் வேண்டுகின்றோம், இறுதியாக உறுப்பு நாடுகள் தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமையுடன் கூடிய ஆம் அரசியல் தீர்வை வழங்க வேண்டும். சிங்கள அரசை தமிழர்கள் நம்ப மாட்டார்கள். எனவே சர்வதேசம் எமக்கான தீர்வை பெற்றுத்தர வேண்டும்-என்றார். (அ)

## பணவீக்கம்...

புள்ளிவிவரங்களுக்கு அமைய இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

அதிக பெயரளவு பணவீக்கம் உள்ள நாடுகளில் சிம்பாவே, லெபனான் மற்றும் வெனிசுலா ஆகியவை முதல், இரண்டாம் மூன்றாம் இடங்களில் உள்ளன என்று உலக வங்கி அறிக்கை தெரிவிக்கிறது.

உலகளாவிய ரீதியில் 205.1 மில்லியன் மக்கள் உணவு நெருக்கடி அல்லது கடுமையான உணவு நெருக்கடியை எதிர்கொள்வார்கள் என்றும் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ)

## சீனாவை...

இந்தியா அந்த இடத்தை பிடித்துள்ளது என்று சர்வதேச அமைப்புகளின் அவதானிப்புகள் தெரிவித்துள்ளன.

பல தரப்பு கடன் வழங்குநராக ஆசிய அபிவிருத்தி வங்கியே கடந்த ஐந்து ஆண்டுகளில் இலங்கைக்கு அதிக கடன் களை வழங்கியுள்ளது. 610 மில்லியன் அமெரிக்க டொலர்களை அது வழங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## காணி...

விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கிராமங்களின் அபிவிருத்தி சங்கங்களின் தலைவர்கள் கூட்டாக இந்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்ததுடன், அனைத்து மக்களையும் இந்தப் போராட்டத்தில் பங்கேற்குமாறும் அவர்கள் கேட்டுள்ளனர். (ஐ)

## ஐ.நா. வரைவு...

அத்துடன், இந்த வரைவை வாக்கெடுப்புக்கு விடப்பட்டாலும் - விடப்படாவிட்டாலும் இலங்கை அதனை எதிர்க்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இலங்கை தொடர்பில் இங்கிலாந்து, கனடா, ஜேர்மனி, மலாவி, மொன்டினீக்ரோ, வடக்கு மசிடோனியா ஆகிய கோர் குழு நாடுகளின் வரைவு கடந்த வாரம் பகிரங்கமானது. அதில், அதிகாரப் பகிர்வு, தேர்தல்களை நடத்துதல், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் அவல நிலையை நிவர்த்தி செய்தல், பயங்கரவாத தடுப்பு சட்டத்தை நீக்குதல் - மாற்றுதல், எதிர்ப்பு போராட்டங்கள் மீதான வன்முறைகளுக்கு பொறுப்புக்கூறல் ஆகியவற்றின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் உள்ளது.

வரைவு குறித்த அரசாங்கத்தின் நிலைப்பாடு தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்தபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், இந்த தருணத்தில் இது தேவையற்ற விடயம் என நாங்கள் அவர் களுக்கு தெளிவாகத் தெரிவித்துள்ளோம். பிளவுபடுத்தும் எந்தப் பொறி முறையையும் இந்த தருணத்தில் விரும்ப வில்லை. எங்களுக்கு சர்வதேச சமூகத் தின் ஆதரவே அவசியம்.

தீர்மானம் ஒன்று முன்வைக்கப்பட்டாலும் இல்லாவிட்டாலும் உள்நாட்டு பொறிமுறை மூலம் நல்லிணக்கத்தையும் பொறுப்புக்கூறலையும் உறுதி செய்வது அரசாங்கத்தின் கடமை. இலங்கையர்கள் என்ற அடிப்படையில் பொறுப்புக்கூறலையும் நல்லிணக்கத்தையும் உள்நாட்டு பொறிமுறை மூலம் உருவாக்குவது எங்களின் கடமையாகும் இது தொடரும்.

எந்த சர்வதேச பொறிமுறையும் எங்கள் அரசமைப்பை மீறும் வகையில் அமைந்திருக்கும். போதிய ஆதரவு இருந் தாலும் இல்லாவிட்டாலும் நாங்கள் இந்த தீர்மானத்தை எதிர்ப்போம். ஏனென்றால் எங்களால் இதனை ஏற்றுக்கொள்ள முடியாது - என்றும் கூறியுள்ளார். (ஐ)

## மகாராணி...

தையுடன் லண்டன் வெஸ்ட்மினிஸ்டர் அபேயில் நேற்று நடைபெற்றது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உள்ளிட்ட 500 மேற்பட்ட உலக நாடுகளின் தலைவர்களும் வெளிநாடுகளின் முக்கிய பிரதிநிதிகளும் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டனர். இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது பாரி யார் மைத்ரீ விக்கிரமசிங்க மற்றும் இலங்கை தூதுவருடன் பங்கேற்றிருந்தார்.

இரண்டாம் எலிசபெத் மகாராணி கடந்த 8ஆம் திகதி தனது 96 வயதில் ஸ்கொட்லாந்தின் பால்மோரல் மாளிகையில் காலமானார். அவரின் உடல் லண்டன் கொண்டுவரப்பட்டு வெஸ்ட்மினிஸ்டர் அபேயில் வைக்கப்பட்டது. இதன்போது பல்லாயிரக்கணக்கான மக்கள் மகாராணியின் உடலுக்கு அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

தொடர்ந்து நேற்று மாலை (உள்ளூர்நேரம்) படைகள் புடைசூழ மகாராணியின் பூதவுடல் தாங்கிய பேழை புனித ஜோர்ஜ் தேவாலயத்தில் வைக்கப்பட்டு ஆராதனை - பிரார்த்தனை இடம்பெற்றது. இதைத் தொடர்ந்து அவரின் குடும்பத்தினர்கள் மட்டும் பங்கேற்ற இறுதிச் சடங்கில், ஆறாம் ஜோர்ஜ் தேவாலயத்தில் அவரின் கணவர் எடின்பரோ கோமகனின் கல்லறை அருகே மகாராணியின் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது. (ஐ)

## இலங்கை...

நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

பத்திரிகையாளர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை குறித்த தனது தீர்ப்பில் நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் அரசாங்கம் தனது செயல்பாடுகள் மற்றும் புறக்கணிப்புகளால் வாழ்வதற்கான உரிமை கருத்து சுதந்திரம் மற்றும் அரசியல் கருத்துக்களின் அடிப்படையில் பாகுபாடு காட்டப்படாமை ஆகியவற்றுக் கான சுதந்திரத்துக்கான உரிமை ஆகியவற்றை மீறியுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளது. (ஐ)

## பிடிபட்ட...

கூறப்படுகின்றது.

உக்ரைன் பத்திரிகையாளர் மரியா ரமனென்கோ இந்த விவரங்களை வெளியிட்டுள்ளார்.

"இலங்கையர்கள் சித்திரவதை செய்யப்பட்டார்கள். அவர்களின் நகங்கள் பிடுங்கப்பட்டன. ரஷ்யர்களுக்காக வேலைபார்க்க நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்", என்று பொலிஸ் அதிகாரிகளை மரியா மேற்கோள் காட்டியுள்ளார்.

மீட்கப்பட்ட இலங்கையர்களில் 6 ஆண்களும், ஒரு பெண்ணும் அடங்குவர். இவர்கள் 20 முதல் 40 வயது வரையானவர்கள். இவர்கள், கல்வியுடனான தொழில் வாய்ப்புக்காக 3 வாரங்களுக்கு முன்னர் உக்ரைன் வந்தனர் என்றும், அவர்கள் ரஷ்ய படையினரின் ஆக்கிரமிப்பிலிருந்த குப்பியான்ஸ்கிலில் வாடகைக்கு வீடு எடுத்து தங்கியிருந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

அங்கிருந்து கார்கிவ் நகரம் ஊடாக உக்ரைன் படைகளின் கட்டுப்பாட்டு பகுதிக்கு வந்தபோது இவர்கள் கைது செய்யப்பட்டனர். கைதானவர்களை ரஷ்ய படையினர் கண்களை கட்டி அடையாளம் தெரியாத பகுதிக்கு கொண்டு சென்றனர். பின்னர் இந்தப் பகுதியை உக்ரைன் படை வசமான நிலையில், கார்கிவ் நகருக்கு நடந்து செல்ல முயன்றபோது மீட்கப்பட்டனர் என்று கூறப்பட்டது. (ஐ)

# 96 நிரப்பு நிலையங்களை ஆரம்பிக்கின்றது ஐ. ஓ. சி.

கொழும்பு, செப். 20

நாட்டில் புதிதாக 96 எரிபொருள் நிரப்பு நிலையங்களை ஆரம்பிக்கவுள்ளதாக லங்கா ஐ.ஓ.சி நிறுவனம் அறிவித்துள்ளது.

நாட்டில் ஐ.ஓ.சி நிறுவனம் எரிபொருள் விநியோக நடவடிக்கைகளை ஆரம்பித்து 20 வருடங்கள் நிறைவடைந்ததையொட்டி, நாரஹேன்பிட்டி - எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நிகழ்வு ஒன்று இடம்பெற்றது.

இதில் கலந்துக்கொண்டு கருத்து வெளியிட்டபோது, லங்கா ஐ. ஓ. சி நிறுவனத்தின் பணிப்பாளர் விக்யான் குமார் இதனைத் தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டில் லங்கா ஐ.ஓ.சி நிறுவனத்துக்கு சொந்தமான 214 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கோழி இறைச்சி விலை நிர்ணயம்

கொழும்பு,. செப். 20

தோலுடன் உறை நிலையிலுள்ள 1 கிலோகிராம் கோழி இறைச்சி நேற்று முதல் ரூபா 1300 முதல் 1350 ரூபா வரையில் விற்பனை செய்யப்படும் என அகில இலங்கை கோழிப்பண்ணை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தொடர்ந்து கோழி உற்பத்திகளை சந்தைக்கு விடுவிப்பது தொடர்பில் சங்க உறுப்பினர்கள் சந்தித்து கலந்துரையாடவுள்ளதாக அகில இலங்கை கோழி உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்துள்ளார்.

முக்கியமாக கால்நடை தீவனம் கிடைத்தால் கோழி உற்பத்தி செலவை குறைக்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

## தடுத்து...

விரோதமான முறையில் ஐரோப்பாவுக்கு பயணிக்க முயற்சித்த குழுவினர் என்றும் அமைச்சர் கூறினார்.

நேற்றுக் காலை அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், போர் ஆரம்பித்த தொடக்க காலத்திலேயே உக்ரைனில் இருந்து இலங்கை வரத் தயாராக இருந்த இலங்கையர்கள் அனைவரும் அழைத்து வரப்பட்டனர் என்றும் அவர் கூறினார். (ஐ)

## மது போதை...

கொண்டனர். இவ்வாறு பதவியேற்றவர் களுக்கு ஜனாதிபதியின் நண்பர் ஒருவ ரின் வீட்டில் இரவுவிருந்து நடந்தது.

இந்த விருந்தில் பல விதமான உணவுகளுடன், உற்சாக பானங்களும் தாரளமாக இருந்தன. விருந்தில் பங்கேற்ற அமைச்சர்கள் உல்லாசமாக மது அருந்தி விருந்தை அனுபவித்தனர். போதையின் உச்சத்தில் அமைச்சர் ஒருவர் தனது துப் பாக்கியை எடுத்து வானத்தை நோக்கி சுட்டுள்ளார்.

இந்தத் துப்பாக்கி சூடு வீட்டுக்குள் நடத்தப்பட்டிருந்தது. இதனால், வீட்டின் கூரையில் துண்டு ஒன்று உடைந்து வீழ்ந்தது. இவ்வாறு விழுந்த கூரையின் பாகம் ஒருவரின் தலையைப் பதம் பார்த்தது.

இதில் காயமடைந்தவர் இராஜாங்க அமைச்சர் இல்லை. அவர் ஜனாதிபதியின் நெருங்கிய நண்பர் என்று அறியவருகின்றது. காயமடைந்தவருக்கு அவசர அவசரமாக இரகசியமாக மருத்துவர் ஒருவர் மூலமும் சிகிச்சை அளிக்கப்பட்டதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ-சி)

## 8 மணி நேர மின் வெட்டு?

கொழும்பு, செப். 20

நுரைச்சோலை லக்விஜய அனல் மின் நிலையத்துக்குத் தேவையான நிலக்கரியை இறக்குமதி செய்வது தொடர்பில் பொறுப்பான தரப்பினர் இன்னும் சரியான இணக்கப்பாட்டுக்கு வரவில்லை என இலங்கை நிலக்கரி நிறுவனம் கூறியுள்ளது.

நிலக்கரியை இறக்குமதி செய்ய ஒப்புக்கொண்ட அதே நிறுவனத்திலிருந்தே நிலக்கரி இறக்குமதி செய்யப்படுமா அல்லது மீண்டும் கேள்வி கோரப்படுமா என்பதை உறுதியாகக் கூற முடியாது என்று அந்த நிறுவனத்தின் உயர் அதிகாரி ஒருவர் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும், இது தொடர்பில் அரசாங்கம் இறுதித் தீர்மானமொன்றை எட்டும் என நம்புவதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஒக்ரோபர் இறுதிக்குள் தேவையான நிலக்கரியை இறக்குமதி செய்யாவிட்டால் கிட்டத்தட்ட 8 மணிநேரம் மின்வெட்டு ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஆனால், ஒக்ரோபர் 20ஆம் திகதி வரை மட்டுமே நிலக்கரி போதுமானதாக இருக்கும் என நிலக்கரி நிறுவனம் தெரிவித்துள்ளது. (அ)

## தியாகி திலீபன்...

வி. மணிவண்ணனின் ஏற்பாட்டில் 17ஆம் திகதி நாவலர் கலா சார மண்டபத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் 7 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழுவே நேற்று நல்லை ஆதீனத்தில் கூடி பொதுக் கட்டமைப்பை உருவாக்கியது.

இந்தக் கூட்டத்தில், மதத் தலைவர்கள், நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பங்கேற்கத் தவறிய அமைப்புகள், அரசியல் கட்சிகள் என்பனவற்றுடன் கலந்துரையாடி 15 பேர் கொண்ட பொதுக் கட்டமைப்பு குழு அமைக்கப்பட்டது.

இந்தக் குழுவில் நல்லூர் சிவகுரு ஆதீன முதல்வர், வேலன் சுவாமிகள், யாழ்ப்பாணம் மறை மாவட்ட குரு முதல்வர் ஜெ. ஜெபரட்ணம் அடிகளார் ஆகியோருடன் முன்னாள் போராளிகளின் - மாவீரர்களின் பெற்றோரின் பிரதி நிதிகள், காணாமல் ஆக்கப்பட்ட உறவி னர்களின் பிரதிநிதிகள், யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள், சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளும் உள்ளடக்கப்பட்டனர்.

மதத் தலைவர்களின் வழிகாட்டலில் இந்தப் பொதுக் கட்டமைப்பு இயங்கும். அத்துடன், அனைத்து கட்சிகள் மற்றும் தரப்பினரை ஒன்றிணைத்து இந்தப் பொதுக் கட்டமைப்பு நினைவேந்தல் தொடர்ச்சியாக முன்னின்று நடத்தும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# ஜெனிவா ஊடாக இலங்கையை முடக்கும் முயற்சிகள் பலிக்காது!

## பிரதமர் தினேஷ் குணவர்த்தன திட்டவட்டம்



கொழும்பு, செப். 20

**"தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள்கூட விடுவிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு கோரிக்கைகள் படிப்படியாக நிறைவேற்றப்பட்டுவருகின்றன. இந்நிலையில் இந்த ஆட்சிக்கு எதிரான சக்திகளே ஜெனிவாவில் முறைப்பாடுகளை முன்வைத்து வருகின்றன. ஜெனிவா ஊடாக எம்மை முடக்கும் முயற்சி கைகூடாது."**

- இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆன்மீக நிகழ்வுகளில் பங்கேற்ற பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"இந்த ஆட்சியை கொண்டு செல்ல முடியாது என கூறியவர்கள்தான், பொருளாதார விவகாரம் தொடர்பிலும் ஜெனிவாவில் முறைப்பாடுகளை முன்வைத்துள்ளனர்.

சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள்கூட முன்னாள், இந்நாள் ஜனாதிபதிகளின்கீழ் விடுவிக்கப்பட்டுள்ளனர். எமது அரசாங்கம் ஜனநாயக ஆட்சி முறைமை பின்பற்றுகின்றது. அந்தவகையில் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுவருகின்றன.

வரலாற்றில் என்றுமில்லாத நெருக்கடியை - சவாலை எதிர்கொண்டுள்ளோம். இந்த நெருக்கடியில் இருந்து மீள முடியும் என்ற நம்பிக்கையை சர்வதேசம் வழங்கியுள்ளது. சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து சாதக பதில் கிடைத்துள்ளது. அமெரிக்கா, ஜப்பான், இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் உதவும். எனவே, ஜெனிவா ஊடாக எம்மை முடக்கலாம் என்ற முயற்சி கைகூடாது. " - எனவும் பிரதமர் கூறினார்.

(அ)

# மருந்துகளின் விலை உயர்வினால் கடும் சிரமத்தில் புற்றுநோயாளிகள்

கொழும்பு, செப். 20

மருந்துகளின் விலை உயர்வால், புற்றுநோயாளிகளும் கடும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் உள்ள சம்புத்தத்வ ஜயந்தி மன்றில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட சிரேஷ்ட பேராசிரியர் கிரிஷாந்த அபேசேன இதனைத் தெரிவித்தார்.

தற்போதைய சூழ்நிலை காரணமாக போதிய வசதிகள் இன்மையால் சிகிச்சை சேவைகளை பேண முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போதுள்ள சுகாதார அமைப்பில் வைத்தியர்களுக்கு சிறந்த சேவை கிடைக்கவில்லை எனவும் சிரேஷ்ட பேராசிரியர் கிரிஷாந்த அபேசேன தெரிவித்துள்ளார்.

(அ)

# மின்வெட்டு நேரம் அதிகரித்தது!

கொழும்பு, செப். 20

இன்று செவ்வாய்க்கிழமையும், நாளை புதன் கிழமையும் மின்வெட்டு நேரம் 20 நிமிடங்களால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

தற்போது, ஒரு மணி நேர மின்வெட்டே நடைமுறையில் உள்ளது. இந்நிலையில், இன்றும் நாளையும் 20 நிமிடங்கள் அதிகரித்து, ஒரு மணித்தியாலம் 20 நிமிடங்கள் மின்வெட்டை அமுல்படுத்துவதற்கு இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கமைய, ஏ, பி., சி, டி, ஈ, எவ், ஜி, எச், ஐ, ஜே, கே, எல், பி, கியூ, ஆர், எஸ், ரி, யூ, வி, டபிள்யூ வலயங்களில் மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரையான காலப்பகுதியில் மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

(ஐ)

# தியாக தீபம் திலீபனின் 5ஆம் நாள் நினைவேந்தல் யாழ். பல்கலையில்



யாழ்ப்பாணம், செப். 20

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் தொடர்ச்சியாக ஐந்தாவது நாளும் நேற்றுக் காலை யாழ்.பல்கலைக்கழகம் மாணவர் ஒன்றியத்தினரால் யாழ்.பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள தியாக தீபம் திலீபனின் பிரதான நினைவாலயத்தில் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது தியாக தீபம் திலீபனின் நினைவுப் படத்துக்கு ஈகைச்சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தி ஒரு நிமிட அகவணக்கமும் மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டது. (அ)



# தியாகி திலீபன் நினைவு ஊர்தி வவுனியாவை நேற்று அடைந்தது

வவுனியா, செப். 20

தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படம் தாங்கிய ஊர்தி நேற்று வவுனியாவை சென்றடைந்தது. இந்த ஊர்திக்கு மக்கள் உணர்வெழுச்சியுடன் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் இளைஞர் அணியின் ஏற்பாட்டில் தியாக தீபம் திலீபனின் 35 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு 'திலீபன் வழியில் வருகின்றோம்' என்ற ஊர்தி பவனி அம்பாறை - பொத்துவிலில் ஆரம்பித்து நல்லூரை நோக்கி செல்கின்றது.

5ஆம் நாளான நேற்று இந்த ஊர்தி வவுனியாவை சென்றடைந்தது. பண்டாரவன்னியன் சதுக்கம், பொங்கு தமிழ் நினைவுத்தூபி, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்ட தளம், மொத்த மரக்கறி விற்பனை நிலையம், இலுப்பையடி என நகரின் பல்வேறு பகுதிகளிலும் மக்கள் உணர்வெழுச்சியுடன் ஊர்தியில் இருந்த தியாகி திலீபனின் திருவுருவப் படத்துக்கு தீபம் ஏற்றியும் மலர் தூவியும் அஞ்சலி செலுத்தினர். (ஐ)

# இலங்கையின் பேரிடர் முகாமைக்கான சர்வதேச கருத்தரங்கு நடைபெற்றது!

கொழும்பு, செப். 20

இலங்கையின் பேரிடர் முகாமைத்துவத்துக்கான ஆசிய பசுபிக் கூட்டமைப்பு தனது வருடாந்த சர்வதேச கருத்தரங்கை நடத்தியுள்ளது. நாட்டில் நிலவும் பிரச்னைகளை விமர்சன ரீதியாக மதிப்பீடு செய்து, எதிர்காலத்தில் செயல்படுத்தக்கூடிய சாதகமான வாய்ப்புகளை முன்னிலைப்படுத்தி "புதுமையான மீட்சியை நோக்கிய கூட்டணியின் சக்தியைத் திறத்தல்" என்ற கருப்பொருளின் கீழ் நடத்தப்பட்டது. இந்த மாநாட்டில் இலங்கையின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த முன்னணி பிரமுகர்கள் மற்றும் சர்வதேச வல்லுநர்கள் ஒன்றிணைந்து கலந்துகொண்டுள்ளனர்.



இந்த நிகழ்ச்சியில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுக்கோசி ஹிடியாகி தனது தலைமை உரையில், ஆசிய - பசுபிக் கூட்டமைப்பானது இலங்கையில் மட்டுமல்லாது, பல ஆசிய நாடுகளிலும் பேரிடர் முன்னெச்சரிக்கையை மேம்படுத்து வதற்காகமேற்கொண்டுவரும் அயராத முயற்சிகளுக்கு தனது பாராட்டுகளைத் தெரிவித்தார்.

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளின் 70 ஆண்டுகால நிறைவானது இரு நாட்டு அரசுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவை மேலும் வலுப்படுத்துவதற்கு பங்களிக்கும். ஆசிய - பசுபிக் கூட்டமைப்பின் இலங்கைக்கான பணிப்பாளர் பிர்ஸான் ஹாசிம் நிகழ்வுக்கு நேர்மறை மற்றும் நம்பிக்கையான தொனியை அமைத்து தொடக்கக் கருத்துக்களை வழங்கினார்.

பல்பரிமாண நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு நாம் தயாராகும்போது, ஆட்சியின் மாதிரியை மறுபரிசீலனை செய்வதற்கான வாய்ப்பு இருப்பதாகத் தோன்றுகிறது. மீட்டமைக்கவும், புத்துயிர் பெறவும் இதுவே நேரம் - இப்போது நாம் எடுக்கும் நடவடிக்கைகள், ஒன்றாக, நமது எதிர்காலத்தை அடிப்படையாக நிர்ணயிக்கும் எனவும் தனது உரையில் குறிப்பிட்டார்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.09.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்




06.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துனையாளர் யாழ் பாவாணன்



7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர்-மறுஒளிபரப்பு
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை

**பகல்**
1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-பொட்டு,ராட்சசி
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா
6.30 மணி : மூவி டோக்கீஸ்-வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்

**இரவு**
7.00 மணி : கதை நேரம்-நகைச்சுவை நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை-இலக்கிய நிகழ்ச்சி
10.00 மணி : டீடுயுஊமு யுேனு றுூஐவுது

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்களும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு